
# அகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி

நெடுங்கவிதை

Rajan

கௌரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AGATHI

A Poem By Gowry

© Author

**First Edition 1991 APRIL**

Published by: SOCIAL RESEARCH CIRCLE
1477 EGLINTON AVE. WEST,
POST BOX NO. 3,
TORONTO, ONTARIO,
M6E 2G6, CANADA.

Design • George R.Ckrhushchev
Cover Design Moorthy
Printed in Canada

Price Cdn $3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கனடாவில் வாழும் கவிஞர் ஒருவர் ஒரு நெடுங்கவிதையை எழுதியுள்ளார். அதற்குப் பெயர் "அகதி". சமீப காலங்களில் தமிழில் சில நெடுங்கவிதைகள் வெளிவந்துள்ளன. இவை எல்லாவற்றையும் படிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காவிடினும் நவீன நெடுங்கவிதை மரபொன்று நம்மிடம் உண்டு எனச் சொல்லலாம் என நினைக்கிறேன். இப்போது இதை எழுதும் போது என் மனதுக்கு உடனடியாக ஞாபகம் வருகின்றன நுஃமானின் 'தாத்தாமாரும் பேரர்களும்', வ.ஐ.ச.ஜெயபாலனின் 'ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்'.

இன்றைய தமிழ் இலக்கியத்தின் புதிய பரிமாணமாய் மிளிர்ந்து விட்ட புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தின் இன்னொரு வெளிப்பாடாக அமைகிறது கௌரியின் 'அகதி'. நோர்வேயிலிருந்த சென்ற வருடம் வெளிவந்த 'துருவச்சுவடுகள்' அணிந்துரையில் நவீன தமிழ் இலக்கியத்துக்கு புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் தர ஆரம்பித்துள்ள இந்தப் புதிய பரிமாணம் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். 'அகதி' இந்தப் புதிய கலைத்துவப் பரிமாணத்துக்கு பின்னால் இருக்கும் மனிதர்கள் பற்றியது. கௌரி என்னும் இளங்கவிஞனை எனக்கு நேரில் தெரியாது. கனடாவில் இருந்து அவர் அனுப்பிய இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்கவிதைக்கூடாகவே நான் அவரைச் சந்திக்கிறேன். ஈழத்தமிழரின் சிதறல்கள் சர்வதேசிய மயமானது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம் அன்றோ.

கௌரியின் படைப்பு என்னிடம் வந்து சேர்ந்தபோது நான் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் புறப்பட அவசர அவசரமாக ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தேன். புறப்படுமுன் ஆறுதலாக கவிதையைப் படிக்க நேரம் கிடைக்கவில்லை. ஆகவே அகதியையும் எனது கைப்பைக்குள் எடுத்துச் சென்றேன். ஒரு மாலை கொழும்பில் நான் தங்கியிருந்த அறையில் என்னைப் பார்க்க வந்த ஒரு நண்பருக்கு நான் கவிதையை உரக்க வாசித்தேன். ஒரு கவிதையை மௌனமாக வாசிப்பதற்கும் வேறு ஒருவர் கேட்க உரக்கப் படிப்பதற்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டென்பதை நான் பல தடவை அனுபவ பூர்வமாகவே உணர்ந்திருக்கிறேன். அதுவும் கூட இருந்து கேட்பவரும் கவிதை இலக்கியத்தில் ஈடுபாடுள்ளவர் என்றால் அந்த உரத்து வாசிக்கும் அனுபவமோ மிகவும் பயன்தரவல்லது. நான் அகதியை உரக்க வாசிக்கக் கேட்ட நண்பர் கவித்துவம் மிக்கவர். தமிழ் மொழியை ஓரளவு தெரிந்தவர். இடையிடையே சொற்கள் கடினமாய் இருந்த போது மட்டும் ஆங்கில மொழிபெயர்ப்புத் தேவைப்பட்டது. முழுக்கவிதையையும் மிகவும் ஈடுபாட்டுடன் கேட்டுக் கொண்டிருந்தார் என்பதை அவருடைய முகபாவம் காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அனுபவத்தில் உரக்கப் படிக்கும் போது கவிஞனின் சொல்லாட்சி கவித்துவத்தின் ஏற்றத்தாழ்வுகள், சொற்களில் அமிழ்ந்திருக்கும் உணர்ச்சிகள்,கருத்துக்கள் எல்லாமே சற்றுத் துல்லியமாகின்றன. உண்மையில் இத்தகையதொரு அப்பியாசத்தின் போது படிக்கப்படும் கவிதையின் ஆரம்ப விமர்சனம் அக உலகில் உணரப்படுகிறது. ஆனால் அக்கட்டத்திலேயே இந்த உணர்வுகளுக்குத் தெளிவான தர்க்கரீதியான வார்த்தை வடிவங்களைக் கொடுப்பது சுலபமானதல்ல. கவிதையை நான் வாசித்துக் கொண்டிருந்தபோது எம்மிருவருக்குமிடையே பேச்சு எதுவும் இடம் பெறவில்லை. ஆனால் எமது பார்வைகளுக்கும் தலையசைப்புகளுக்கும் ஊடாக ஒரு வித கூட்டு ரசிப்பிலும் மதிப்பீட்டிலும் ஈடுபட்டோம் எனலாம்.

அகதியை முற்றாகக் கேட்டபின் எனது நண்பர் "very powerful messages" என்று இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி விட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார். ஆம்! மிகவும் பலமான செய்திகள் தான். இந்த முன்னுரையில் இந்தச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறேன். அப்படியென்றால் கவிதையின் அழகியல் அம்சங்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள் எனச் சிலர் அவசரத்தில் சீறலாம். அந்தக் கேள்விக்கு சுருக்கமான ஆரம்பப் பதிலை சொல்லி வைக்கவும் விரும்புகிறேன். நான் கருத்துக்களை, செய்திகளை கவிதையில் இருந்து வெட்டிப் பிரித்து அலசி ஆராய முற்படவில்லை. நான் கவிதைகளை விரும்பிப் படிப்பவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கவிஞன் இல்லை. கவிதை எழுதும் விதிகள் பற்றிய ஆழ்ந்த அறிவெதுவும் எனக்குக் கிடையாது. ஆனால் நான் கவிதைகளைத் தேடிப் படிப்பதற்கான காரணங்களில் ஒன்று கவித்துவம் எனப்படும் அழகியற் பண்பு எனக்குத் திருப்தி தருவது தான்.

எனது தொழில், எனது அரசியல் ஈடுபாடு இவைகளின் காணங்களால் நான் சமூக விஞ்ஞான உலகிலேயே பெருமளவில் சஞ்சரிக்கிறேன். நாம் வாழும் உலகம் பற்றிய சமூகப் பொருளாதார ஆய்வுகளில் இருந்து நாம் நிறையத் தெரிந்து கொள்ளலாம் என்பது உண்மை தான். ஆனால் அதே நேரத்தில் நாம் கலைத்துவ ஆக்கங்களைத் தேடிப் படிக்கிறோம். கவிதைகள் பற்றியும், அவற்றைப் படைத்த கவிஞர்கள் பற்றியும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுகிறோம். சமூக விஞ்ஞானத்திடம் இருந்து பெறமுடியாத எதையோ நாம் அதே சமூகத்திடம் இருந்து பிறக்கும் கலை, இலக்கியங்களில் தேடுகிறோம். கலைத்துவ ஆக்கங்கள் தனிமனிதனின் அக உலகங்களையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கின்றன. அவற்றில் இழையோடும் கற்பனை வளம், நமது அக உலகின் அழகியற் தேவைகளுக்குத் தீனி போடுகிறது. சமூகப் பிராணிகளான தனிமனிதனின் வாழ்நிலைகளின் தன்மைகளைத் துருவி, அவற்றின் உயிர்ப்பினை பிரதிபிம்பங்களாக்கும் கலைஞர்களற்ற ஒரு சமூகத்தை நம்மால் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவித்துவத்தை ஒதுக்கி யாருமே கவிதையைப் படித்து ரசிக்க முடியாது. ஆகவே நானும் அழகியலைத் தேடுகிறேன். ஆனால் அந்தத் தேடல் எமது சமூகப் பார்வையால் கலாசாரப் பின்னணியால் நெறிப்படுத்தப்படுகிறது. இது எனக்கு மாத்திரமுள்ள சிறப்பம்சமல்ல. கலை இலக்கியம் படைப்போர், படிப்போர், ரசிப்போர் எல்லோரும் அவரவர்க்குரிய பார்வைகளைக் கொண்டுள்ளார்கள். இதனால் தான் அழகியல் விவாதத்துக்குரிய விடயமாகிறது. விவாதங்கள் அவசியமானவை. அவை சுதந்திரமாக இடம் பெறும் சூழ்நிலைகளுக்காக நாம் போராட வேண்டும். நமது நிலைப்பாடுகள் மாற்றம் பெறக் கூடியவை. நமது கருத்துக்கள் பரிமாணம் பெறக்கூடியவை. நமது அடிப்படைக் கொள்கைகளை தகைமைப்படுத்த வேண்டும். ஆனால் அத்தகைய தகைமைப்பாடுகள் (நிபந்தனைகள்) நாம் கொள்கைகளுக்காகப் போராடுவதைத் தடை செய்யக் கூடாது. ஏனெனில் போராட்டமெனும் நடைமுறைக்குள் நமது நிலைப்பாடுகள் பரீட்சிக்கப்படுகின்றன.

'அகதி' ஒரு அகதியின் சுயசரிதையாய் நகர்கிறது. அது தமிழ் அகதிகள் எப்படி உருவாகுகிறார்கள் என்பதை கவிஞன் கௌரியின் அவன் சந்திக்கும் சில .தனி மனிதர்களின் சரிதைகளுக் கூடாக வெளிப்படுத்துகிறது. இங்கு நாம் இந்தத் தனிமனிதனின் அகஉலகங்களுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசிக்கிறோம். அவர்களின் அவலங்களைக் காண்கின்றோம். உணர்கின்றோம். 'அகதி' ஆத்திரமும் கவித்துவமுமான துன்பியலும் மிகுந்தது. இந்த நெடுங்கவிதையை ஒரு வகையில் ஒரு பயங்கரமான குற்றப் பத்திரிகை எனலாம். இலங்கையின் தமிழரை ஒடுக்கும் இனவாத அரசு, எதேச்சாதிகார இராணுவத்தால் ஆட்டிப் படைக்கப்படும் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டப் போக்குகள், இவற்றால் அறிவுரீதியில் பாசிச வாதத்துக்குள்ளாக்கப்பட்ட நமது சமூகம், கபடமிகு விழுமியங்களைக் கொண்ட தமிழ் நடுத்தர வர்க்கம் இவையெல்லாமே கவிஞனின் குற்றச்சாட்டுக்கள் ஆகின்றன.

'அகதி'யில் நாம் சந்திக்கும் தனிமனிதர் தமது அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் நம்முடன் பகிர்ந்து கொள்ளும் போது ஒரு அடிப்படையான செய்தியையும் விட்டுச் செல்கிறார்கள். அது தான் ஈழத்தமிழர்களின் விடுதலையின் அவசியமும் அந்த விடுதலைக்கு அவசியமான மனிதத்துவத்தின் மீட்சியும். புலம்பெயர்ந்த காரணத்தால் தமிழ் ஈழத்தவர் என்னும் மானசீக அந்தஸ்திலிருந்து தமிழ் அகதிகள் என்னும் அந்தஸ்தைப் பெற்றுள்ள சில மனிதர்களின் அவலங்களுக்கூடாகவே ஈழத்து யதார்த்தம் பிரதிபலிக்கப்படுகிறது. மறைமுகமாகவும் நேரடியாகவும் விமர்சிக்கப்படுகிறது. கௌரியின் சுயசரிதைப் பாங்கு இதை உணர்ச்சிகரமாகச் செய்வதற்கு மிகவும் உதவியுள்ளது எனலாம். நமது சமூகத்தில் பலருக்கும் பொதுவாகி விட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களும், வெளியுலகுக்கு புதினச் செய்திகளாகவும் கட்டுரைகளாகவும் தெரியப்படுத்தப்பட்ட உண்மைகளும் இங்கே ஒரு அகதியின் தனித்துவத்துக்கூடாக வெளிப்படுத்தப்படுகின்றன.

'அகதி'யின் களம் மேற்கு நாடு ஒன்றில் அமைகிறது. அடைக்கலம் கோரி வந்த ஒரு மனிதனுக்கு ஏற்படும் முதல் அனுபவங்கள், அவமதிப்புக்கள் அவனை முதலில் விரக்திக்குள்ளாக்குகின்றன. பின்னர் சிந்திக்கத் தூண்டுகின்றன. தனது நிலைமைக்குக் காரணமான சகலவற்றின் மேலும் அவன் ஆத்திரம் திரும்புகிறது. அதே ஆத்திரம் மேற்கத்தியச் சமூகங்களின் இரட்டை நியமங்கள் மீதும் திரும்புகின்றது. ஆனல் நமது 'அகதி'யின் முக்கிய ஈடுபாடு ஈழத்துடன் தான். 'அகதி' ஈழத்தை நோக்கிய ஒரு அகவுலகப் பயணம். சென்ற கணம் வரை வாழ்ந்த நிஜமான வாழ்க்கை, அதனை மீண்டும் ஒரு தடவை வாழ்ந்து அந்த அனுபவங்களை நம்மிடம் பேச வைக்க முயற்சிக்கின்றார். 'அகதி'யில் நாம் மேற்கு நாடுகளுக்கூடாக ஈழத்தைக் காண்கிறோமா? அல்லது ஈழத்துக்கூடாக மேற்கு நாடுகளைக் காண்கிறோமா? என்ற கேள்வி ஆரம்பத்தில் எழுலாம். எனது அபிப்பிராயத்தில் ஈழத்துக்கூடாகவே இடைக்கிடை மேற்கு நாடுகளைக் காண்கிறோம். தமிழ் அகதிகளின் வாழ்க்கை மேற்கு நாடுகளில் எப்பேர்ப்பட்டது என்ற படத்தை நாம் பூரணமாகப் பார்க்க முடியவில்லை. ஆனல் 'அகதி'யில் என்ன இல்லை என்று தேடுவதை விட என்ன இருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பார்ப்பது அதிக பயனையும், அதிக திருப்தியையும் தரலாம்.

இந்த நோக்கில் இந்த நெடுங்கவிதையின் சில அம்சங்களைப் பார்ப்போம். மேற்கு ஐரோப்பாவையும், வட அமெரிக்காவையும் நோக்கிய தமிழ் அகதிகளின் பயணங்கள் இன்னும் தொடர்கின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்கத்திய தலைநகரங்களுக்கான பாதைகளோ பல நெளிவு சுழிவுகளைக் கொண்டது. இந்தப் பயணம் நீண்டது மட்டுமல்ல பல ஆபத்துக்களையும் கொண்டது. ஊரில் ஏஜண்டுகள் பணத்தைப் பெற்றபின் சில வேளை காலை வாரி விடலாம். சில வேளை விமான நிலையங்களில் வைத்து கைது செய்யப்படலாம். இவற்றையும் தாண்டி நாம் வெளியேறிய பின் எங்காவது ஒரு விமானநிலையத்தில் வைத்து கைது செய்து திருப்பி அனுப்பப்படலாம். அல்லது போக முற்பட்ட நாட்டைப் போய் அடையாது வேறொரு நாட்டில் அகதிகளாகலாம். மேற்கிலே அரசியல் தஞ்சம் கோரி வரும் மூன்றாம் உலகத்தவர் வேண்டாத விருந்தாளிகள். இந்த வேண்டாத விருந்தாளிகளில் ஈழத்தமிழர் விசேட பிரபல்யம் பெற்றவர்கள். மூன்றாம் உலக அகதிகள் மேற்கத்திய நாடுகளுக்குள் புகுவதைத் தடுக்க சகல முயற்சிகளையும் எல்லா மேற்கத்திய அரசுகளும் எடுக்கின்றன. இதனால் பல அகதிகள் அரசாங்க அதிகாரிகளால் கால் பந்துகள் போல் ஒரு தலைநகரில் இருந்து இன்னொரு தலைநகருக்கு உதைக்கப்படுவதும் சகஜமாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அபாயங்களைக் கொண்ட இந்தப் பயணத்தில் வெற்றி பெற்று விட்ட அந்த அகதியைக் கண்ட மேற்கத்திய நாட்டின் அதிகாரிகள் இறுக்கினர் தங்கள் முகங்களை.

"பொய்யான நாட்டின்
பாஸ்போட் ஒன்றினுள்
பொறித்த என் தலையை
வெறுப்புடன் பார்த்தனர்
...........
அடிமையாய் அங்கு நீ
அழிவது உன் விதி
...........
காட்டுமிராண்டி நாட்டிலிருந்து
களவாய் வந்த நீ
திரும்பிப் போய் விடு"

இந்த வரவேற்பு நாகரீகம் ஓங்கி வளர்ந்து விட்ட மேற்கின அரசியல் அமைப்புடன் ஒரு கறுப்பு அகதிக்கு ஏற்படும் முதலாவது சந்திப்பு **"Global apartheid"** எனப் பலரால் வர்ணிக்கப்படும் வடக்கு தெற்கு அசமத்துவத்தின் ஒரு மென்மையான வெளிப்பாடு தான். ஆனால் இந்த வரவேற்பை அனுபவிப்பதற்கு முந்திய பயணத்தின் முதலீட்டின் கதையோ ஒரு துன்பியல்

"ஆடு மாடு தோட்டம்
ஏன் என்
அம்மாவைக் கூட
அடமானம் வைத்து
அகதியாய் வந்த
அப்பாவி மனிதன் நான்
உயிரினைக் காத்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்யுங்கள்"

இங்கு ஒருவர்க்க உண்மையும் புதைத்துள்ளது. மேல்நாட்டுக்குப் புறப்படும் அகதி ஒருவருக்கு விற்றுக் காசாக்க ஏதோ ஒரு சில சொத்துக்கள் இருக்கின்றன. அல்லாவிடில் அதுவும் வெறும் கனவு தான். ஆனல் இருக்கும் அற்ப சொற்ப சொத்துக்களையும் அழித்து வெளியேறும் நிலைக்கு என்ன தான் காரணம்?

"எனது வாழ்க்கையை
எனக்கெனக் கேட்டதால்
என்னைச் சிறைகளில்
இலங்கையில் அடைத்தனர்
என்னையும் கொஞ்சம்
பேசிட விடு என
எனது நண்பனை நானே கேட்டேன்
என்னைக் காட்டின்
மரங்களில் கட்டினர்

இனவாத அரசின் ஒடுக்குமுறை ஒருபுறம், இயக்கங்களின் ஒடுக்குமுறை மறுபுறம். இந்த இரட்டைத் தாக்கங்களினல் துரத்தப்பட்டவனே இந்த அகதி. ஒடுக்குமுறையில் இருந்து மக்களை விடுவிக்க துப்பாக்கி ஏந்திய இயக்கங்களே மக்களை அதுவும் இலட்சியவாதிகளை, விடுதலைப்போராளிகளை அடக்கித் துன்புறுத்தி அகதிகளாக ஓடவைக்கும் பயங்கரம் நமக்கு வரலாறு விதித்த சாபக்கேடா என்ற நியதி வாதத்துக்குக் கூட சிலர் தள்ளப்படலாம். இனரீதியான ஒடுக்குமுறையின் வரலாற்றிற்கு இனவாத அரசு பொறுப்பு. ஆனல் இந்த உள்ளார்ந்த புதிய அடக்குமுறையோ நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய விடுதலைப் போராட்டத்தின் அரசியலின் உள்ளியக்கதின் இயங்கியலின் ஒரு வெளிப்பாடாகும். இது பற்றிப் பின்னர் பேசுவோம். இப்போது இன்னொரு அகதியின் கதையையும் கேட்போம். அவரும் சிலரும் ஒரு இயக்கத்தின் உள்ளூர்த் தலைவனால் கடத்தப்பட்டு வேறு ஓர் இடத்தில் வைக்கப்படுகின்றனர். அந்த உள்ளூர்த் தலைவனோ இவரின் பாலிய நண்பன். அவனிடம் காரணம் கேட்டால்

எனக்குக் கூட எதுவுமே தெரியா
தலைமை என்னைக் கடத்தச் சொன்னது
அத்துடன் எனது
கடமை முடிந்தது

இது விடுதலைப் போராளியின் ஆளுமையை அவன் எப்படி உருவாக்கப்பட்டுள்ளான் என்பதை நன்கு பிரதிபலிக்கிறது. பொதுமக்களைக் கடத்துவதற்காக கட்டளையின் காரணத்தைக் கூட தலைமையிடம் கேட்கும் சுதந்திரம் அற்ற, உரிமையற்ற ஒரு கடமைப்பாடு. ஆனால் கடத்துவதுடன் மட்டும் அவனின் கடமை முடிந்து விடவில்லை. இரண்டு நாட்களின் பின் அவனே சொல்கிறான்

உங்களில் எவரும்
எந்தத் தவறும் செய்தவரில்லை
என்பதை அறிவேன்
ஆயினும் உங்களில் ஒருவனைச் சுட்டு
சடலத்தைக் கொண்டு போய்
light post இல் கட்டி
எங்கள் இயக்கத்தைக்
காட்டிக் கொடுத்ததாய்
காரணம் எழுதி ஒட்டும்படிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

order எனக்கு
என்றான் என்னிடம்

இது மக்களுக்கு ஓர் எச்சரிக்கையாம். எமது விடுதலைப் போரில் light post வரலாற்று முக்கியத்துவம் பெற்று விட்டது. இருட்டிலே ஒளியைப் பாய்ச்சும் மின்விளக்கைத் தாங்கும் அதன் பணி ஒன்றும் வரலாற்று முக்கியத்துவம் பெற்றதல்ல. இப்போ அதன் பணி துரோகிகளைத் தாங்குவதே. துரோகிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தான். ஆனால் துரோகிகளைப் பொய்யாக உற்பத்தி செய்து நிரபராதிகளுக்குத் துரோகிப் பட்டம் சூட்டும் பயங்கரவாதம் விடுதலையின் அடிப்படை விழுமியங்களையே அழிக்கும் தன்மையானது. இத்தகைய செயல் இயக்கங்கள் மக்களை நம்பாத, மதிக்காத தன்மையைத் தான் காட்டுகிறது. இயக்கங்கள் வெகுஜனத் தன்மை குன்றியவை என்பதையும், மனிதாபிமானத்துக்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்புக் கொடுக்கவில்லை என்பதையும் காட்டுகிறது. ஆனால் இச்சம்பவத்தின் குரூரத்தின் சிகரத்தைக் காண்பதற்கு மிகவும் பலமான இதயம் வேண்டும்.

உள்ளூர்த் தலைவன் சொல்கிறான்

உங்களில் யாரை
கொல்வது என்று
எங்களுக்கு இன்னமும் குழப்பமாய்
உள்ளது

.............

எனவே நாங்கள்
இப்படியாக முடிவு செய்துள்ளோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிஷ்டக் குலுக்கல்
முறையில் உங்கள்
அனைவரின் பெயரையும்
எழுதிக் குலுக்கி
அதில் தெரிவாவது யாராயிருப்பினும்
அவனையே கொன்றிட
முடிவு செய்துள்ளோம்

அந்த இயக்கத்தின் விதிகளின்படி கூட அவர்கள் அனைவரும் நிரபராதிகள். ஒருவரும் காட்டிக் கொடுத்தவர்கள் இல்லை. இந்த உண்மை அந்த இயக்கத்துக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. மக்களை எச்சரிக்க ஒரு பலியாடு வேண்டியிருந்தது. அந்தப் பலியாட்டை மிகவும் "நீதியான" முறையில் தேர்ந்தெடுத்தது இயக்கம் (இச்சம்பவம் உண்மையில் நடந்ததா? இல்லையா என்பதைச் சொல்ல என்னால் முடியாது. ஆனால் இது நடக்கக் கூடியது எனலாம். அந்தச் சூழ்நிலை தான் இங்கு முக்கியமானது)

இந்தப் பயங்கரவாதம் 'அகதி'யில் நாம் சந்திக்கும் மக்களின் வாழ்வை நமது சமூகத்தின் ஸ்தாபன மயமாக்கப்பட்டு விட்ட பலாத்காரம் எப்படி ஆட்டிப்படைத்துள்ளது, இது இன்று நமது சமூகத்தில் பலாத்காரம் என்ன பங்கினை வகிக்கின்றது என்ற ஒரு அடிப்படையான கேள்வியை எழுப்புகின்றது. இந்தக் கேள்வியோ அரசியல், சமூக, அறநெறிப் பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையே மிகவும் பயங்கரமான பலாத்காரமானது. இது ஸ்தாபன மயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாத்காரம் மிகுந்த இன ஒடுக்கலில் இருந்து தமிழ் மக்கள் விடுதலை பெற பலாத்காரத்தின் உதவி தவிர்க்க முடியாதது. ஆனால் இந்தப் பலாத்காரம் விடுதலை அரசியலுக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட அதன் கருவியான புரட்சிகரப் பலாத்காரமாகும். இது மக்களுக்கான மக்களின் பங்காற்றலுடன் ஆயுதம் தாங்கிய எதிரி மீது பாவிக்கப்படும் பலாத்காரமாகும். இந்தப் பலாத்காரம் எதிரியை அமைப்பு ரீதியாக அழிக்கும் வெகுஜன அரசியலின் ஒரு அங்கமே ஒழிய இது தான் விடுதலை அரசியலோ போராட்டமோ ஆகாது. எதிரிக்குக் கலக்கத்தையும் மக்களுக்குத் தன்னம்பிக்கையையும் கொடுக்கும் தன்மையானது இந்தப் பலாத்காரம். ஆனால் விடுதலையின் பேரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பலாத்காரம் மக்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் திருப்பப்படும் போது அதன் புரட்சிகரத் தன்மையை இழந்து விடுகிறது. அதன் எதிரியிடையாக மாற்றம் பெறுகிறது. அரசின் பலாத்காரத்தைப்போன்றே மக்களைக் கலக்கிப் பயத்தில் ஆழ்த்தி, அவர்களின் தன்னம்பிக்கையை அழித்து விடுகிறது. இதனால் நேரடியாகப் பாதிக்கப்படுவோர் அகதிகளாகலாம். இதனால் பாதிக்கப்படலாம் என்ற பயம் பொதுமக்களை ஊமைகளாகவும் குருடர்களாகவும் நடித்து அவஸ்தைப்படும் நிலைக்குத் தள்ளலாம். தம் உயிரைக் காக்கும். ஒரே நோக்கத்துடன் மக்கள் சந்தர்ப்பவாதிகளால் ஓமோம் போட்டு வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்குத் தள்ளப்படலாம். துப்பாக்கி நிழலில் வாழும் மக்கள் தலையை நிமிர்த்தக் கூடப் பயப்படலாம். விடுதலைப் போராட்டம் வெகுஜனத் தன்மை குன்றி மக்கள் ஜனநாயகத்தின் வழிகாட்டல் இன்றி இருப்பதையும் அதை அதிகாரத்துவ வாதமும் இராணுவ வாதமும் வழிநடத்துவதையுமே இந்த நிலை காட்டுகிறது.

இந்த நிலைமையையும் விடுதலையின் அர்த்தத்தையும் மக்களின் எதிர்காலத்தையும் பற்றி ஒரு சம்பாஷணை போல் அமைகிறது 'அகதி'யில் வரும் கனவொன்று. கவிஞன் தன் தாயை கனவிலே சந்திக்கிறான். இலங்கையில் இந்திய இராணுவம் இருந்த காலமது. ஆனால் அந்தக் கனவிலே எழுப்பப்படும் கேள்விகளும் கவிஞனின் தாய் சொல்லும் கருத்துக்களும் இன்றைக்கும் பொருத்தமானவை. இந்தக் கனவுச் சம்பாஷணை பல இடங்களில் மிகவும் நன்றாக அமைந்துள்ளது.

தாய் சொல்கிறாள்.

மக்களை விட்டு
மண்ணையும் விட்டு
வாழ்க்கையைத் தின்று
மலிகின்ற மரணம்

இந்த வரிகள் இன்றைய அவலங்களை மிகவும் திறம்பட வெளிப்படுத்துகின்றன. மக்களும், மண்ணும் இயக்கங்களில் சுலோகங்களில் முக்கிய அம்சங்கள். ஆனால் யதார்த்தமோ இவற்றையும் விட்டு வாழ்க்கையையும் ஒழித்து நிறையும் மரணங்களின் நிசப்தமாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தொடர்கிருள்

மானிட விழுமியம்
பின்னேக்கிச் செல்ல
மந்தைகள் போலவே
வாழ்கின்ருேம் நாங்கள்

மக்கள் இந்நிலைக்குத் தள்ளப்படுவது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன்.

இதனிடை இன்றைய புதிய போராளிகளேயும் ரூபக் குறிப்பொன்றையும் கேட்கின்ருேம்.

உந்தனின் தம்பி
..........
இன்னமும் ஈரேழு
வயதிலும் குறைந்தவன்
இப்போ அவனெரு
போராளியென்கிருர்
......
இறக்கையில் ஆயுதம்
ஏனென்று புரியாமல்
ஏந்தியே அலைகிருன்
.......
எதற்காகச் சுடுகிருேம்
எவரை நாம் கொல்கிருேம்
என்பது பற்றிய
எண்ணங்கள் அற்றவர்

துன்பகரமாக அமைந்துள்ள இக்கனவில் அங்கும் இங்கும் நம்பிக்கை ஒளிகளும் தெரிகின்றன. போராட்டம் மக்கள் போராட்டமாக அமைய வேண்டும் எனும் தொனி இடைக்கிடை கேட்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்

அரசியல் என்பதை
அறியாத ஆயுதங்கள்
அகதிகளாகவே துரத்துது மக்களை

என்ற செய்திதான் பலமாகக் கேட்கிறது.

வாழ்க்கையை முதலில்
நேசிக்க வேண்டும்
வாழ்க்கையைத் தேடியே
போரிட வேண்டும்

என்ற செய்தியும் வருகிறது. அரசின் ஒடுக்குமுறை, இயக்கத்தின் ஒடுக்குமுறை என்னும் இரட்டைத் தாக்கத்துக்கு உள்ளான ஒரு அகதி, தன் தாய் நாட்டைப் பற்றிக் கவிதை படைத்தால் அது ஒரு சோக சித்திரமாகத் தான் அமையுமோ? இருக்கலாம். ஆனால் இந்தக் கவிஞன் முற்றாக நம்பிக்கை இழந்திடவில்லை என்பதற்கும் அறிகுறிகள் உண்டு.

* * * * *

இந்த அறிகுறிகள் பளிச்சிடுகின்றன பின்வரும் வரிகளில்

ஓடு நீ ஓடு
ஆயிரம் மைல்கள்
ஆயிரம் கடல்கள் தாண்டியும் நீ ஓடு
.............
ஆயினும் மனிதனே
அடிமை விலங்குகள்
கைகளிலிருந்து நீ
போரிடு மட்டும் போகாது போகாது

இந்த வரிகளில் துருவச்சுவடுகளில் வெளிவந்த வயவைக் குமரனின் 'அகதி' என்ற கவிதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயல் பலமாகத் தெரிகிறது. ஆனால் புலம் பெயர்ந்த தமிழரின் சமூகத் தன்மைகளையும் காண்கிறோம். கௌரியின் நெடுங்கவிதையில் மேற்கு நாடுகளில் வந்திறங்கியதும் கைது செய்யப்பட்ட பின்னர் அடைத்து வைக்கப்பட்ட விடுதியில் தமிழர்கள் உட்பட பல நாட்டு அகதிகள். இவர்கள் பலவிதம்.

விடுதலைப் போரின் ரத்தத்தை விற்று
வியாபாரம் செய்து
பணம் சேர்க்க வந்தவர்
மக்களின் சொத்தை
கொள்ளை அடித்ததால்
மாவீரராகி மகிழ்வோடு வந்தவர்
வேலைவாய்ப்புகள்
வெற்றிடமின்மையால்
வேலை தேடிட
விரும்பியே வந்தவர்
பயங்கரவாத நச்சுக்கரங்களால்
பால்வதைப் பட்டதால்
பயங்கொண்ட பெண்கள்

தமிழ் அகதிகள் மத்தியிலும் இப்படிப் பலவிதமான அகதிகள். இவர்களை எல்லாம் சோதனைக்குள்ளாக்குவது போல் நடைபெறுகிறது ஒரு சம்பவம். விடுதியில் உள்ள ஒரு தமிழ் அகதியை திருப்பி அனுப்பிட உத்தரவு வந்தது. இந்த அகதியோ இயக்கங்களை விமர்சனம் செய்து ஆபத்தில் மாட்டிக் கொண்டதால் வெளியேறியவன். இவனைத் திருப்பி அனுப்புதல் கூடாது என்று போராட வேண்டுமென சில தமிழ் அகதிகள் நினைக்கின்றனர். தங்களுக்கும் இந்தக் கதி வரலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பயமும் அவர்களுக்கு. உண்ணாவிரதம் இருத்தல் நல்லதொரு வழியென சிலர் கருதினர். ஆனால் தனித்தனியாகத்தம் வாழ்நிலைப் பிரச்சனைக்குத் தீர்வு தேடி வந்த நடுத்தர வர்க்கத் தமிழர் பலர் இதை ஆதரிக்கத் தயங்கினார்கள். சொத்தை விற்றுக் கனடா வந்த ஒரு அகதி

என்னையும் இவர்கள்
நாடு கடத்தினால்
எந்தனின் பணத்தை
யார் தான் தருவார்
எனக்கேட்டார்.

அகதிகள் விடுதியில் இடம் பெறும் இந்தச் சம்பவம் நமது சமூக அமைப்பின் சமூக இயல்புகளைப் புலப்படுத்துகிறது. தமிழ்ச் சமூகத்தின் நடுத்தரக் குடும்பங்கள் உள்சார்ந்தோர் சுயநலம் பேணிடும் நியாயப்பாட்டில் அமைந்த வாழ்க்கைத் தத்துவத்தைக் கொண்டோர் என்ற அபிப்பிராயம் பரவலானது. நாமும் இதை சுயவிமர்சனப் பாணியில் தாக்குவதுண்டு. இந்த வாழ்முறை விழுமியத்தின் தாற்பரியத்தை செப்பமாக்கிக் கைப்பற்றுகின்றன இந்த வரிகள்.

பார்வையாளராய் இருப்பதும்
பின்னர்
பலனை மட்டுமே பெறுவதுமென்ற
பாரம்பரியத்தில் பழகிய மாற்றம்

இத்தகைய இலவசப் பயணிகள் (Free riders) நமது சமூகத்தில் மட்டுமல்ல, எங்குமே உள்ளார்கள். இந்தப் போக்கினை நமது சமூகத்தின் விசேட தன்மைகளைத் தள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துப் புரிந்து கொள்ள முடியாது.

யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பு சிறு உற்பத்தியாளரையும் நடுத்தர வர்க்கத்தினரையும் பெருமளவில் கொண்டது. சாதி அமைப்பு, வர்க்கப் பரிணமம், சமூக நகர்ச்சி போன்ற அம்சங்கள் ஒன்ருெடொன்று பின்னிப் பிணைந்து சமூக உறவுகளை ஊடறுக்கின்றன. இந்த அமைப்பில் தனிமனிதனின் சமூக நகர்ச்சியும் குடும்பத்தின் அந்தஸ்து நகர்ச்சியும் ஒன்றுக்கொன்று உதவுவன. குடும்ப உறவுகள், உள்ளூர் வெளியூர் சமூக உறவுகள் ஒரு தொடர் வலையமைப்பாக இயங்குவதைக் காண்கிருேம். இந்தச் சமூக வலையமைப்புகள் இப்போது சர்வதேச ரீதியில் பரவியுள்ளன. இத்தகைய வலையமைப்புகளுக்கு தனிப்பட்ட குடும்பங்கள் (தனிநபர்கள்) தமது சுயநலங்களைப் பேண வளர்க்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு நடுத்தர மட்டக் குடும்பங்களும் ஒரு சில அங்கத்தவரையாயினும் மேல் நாட்டுக்கனுப்புவதற்குப் போட்டி போடுகின்றன. இந்த நகர்ச்சிக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதே இப்போது ஒரு வியாபாரமாகி விட்டது. இன்றைய நிலையில் பொதுவாக எல்லோருமே பாதுகாப்பை நோக்கி ஓடுகிருர்கள். தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ பலருக்கு நாட்டை விட்டு வெளியேறுதல் மட்டுமே உயிரைப் பாதுகாக்க இருக்கும் ஒரு வழி.

ஆனல் எல்லோருமே பாதுகாப்பைத் தேடி ஓடினலும் அவர்கள் நோக்கிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குகளோ ஒவ்வொரு குடும்பத்தின் சமூகப் பொருளாதார, அந்தஸ்து அபிலாஷைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. பாதுகாப்பு எல்லோரும் நாடும் ஒரு அடிப்படைத் தேவை. பாதுகாப்புடன் வசதிகளையும் செல்வத்தினையும் தேடி வருகின்றனர் ஐரோப்பா வருபவர். இந்த ஆசை முற்றாக நிறைவேறா விட்டாலும் அது நிறைவேறும் என்ற நம்பிக்கை ஐரோப்பா, வட அமெரிக்கா வந்தபின்னர் பலம் பெறுகின்றது. சாத்தியமானதெனக் கருதும் இந்த அந்தஸ்தில் கண்ணுயிருக்கும் இந்தப் புலம் பெயர்ந்தோர் தமது சுயநலங்கள் பாதிக்கப்படா என்ற உத்தரவாதமின்றி அற்ப உரிமைகளுக்காகக் கூட குரல் கொடுக்க முன்வரவமாட்டார்கள். அதே நேரத்தில் தமது சமூகத்தைச் சேர்ந்த மற்றையோர் நடத்தும் போராட்டம் தமக்கும் பொது நன்மைகளை ஏற்படுத்தலாம் எனத் தெரிந்தால் தாம் அந்தப் போராட்டத்தில் பங்குபற்றாமல் அதன் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதே சுய இழப்பில்லாத வழி எனவும் தமக்குத் தாமே நியாயம் சொல்லிக் கொள்வார்கள்.

ஆனால் சகல யாழ்ப்பாணத் தமிழருமே சுயநலமிகள் என்பது அர்த்தமற்றது. இதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இது ஒரு பிரதேசத்தவர்கள் பற்றிய பிழையான விஞ்ஞான பூர்வமான கருத்து. சமூகத்தில் நாம் காணும் மோசமான சுயநலமியின் எதிரிடை தான் நமது இளம் விடுதலைப் போராளி. அந்தப் போராளி எந்த இயக்கத்திலும் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு அல்லது அவளுக்கு உரிய குணாதிசயம் ஒன்றுண்டு. அது தான் தனது இயக்கத்திற்குக் கட்டுப்பட்டு உயிர்த்தியாகத்துக்கும் அஞ்சாது போரிடுவதாகும். நமது சூழலில் இந்த அர்ப்பணிப்பு இயக்கத்தின் உள்ஜனநாயகம், சுயவிமர்சனம் எனும் அடிப்படைகள் கூட நிராகரிக்கப்பட்ட அமைப்புகளுக்குள்ளேயே இடம் பெறுகிறது. இதன் அரசியல், அல்லது அரசியலின்மை பற்றி ஏற்கனவே பேசி விட்டோம். இங்கு நாம் குறிப்பிட விரும்புவது இது தான். இந்த இரண்டு எல்லைகளான பூரண சுயநலமிக்கும் சுயநலம் துறந்த போராளிக்கும் இடையில் பல்வேறு வகையான மனிதர்களைச் சந்திக்கிறோம். எல்லோரும் சமூக மனிதர்கள். இவர்களின் தனித்துவங்களை சமூகத் தன்மையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

'அகதி'யின் பாத்திரங்கள் இன்னும் அகதியின் ஆரம்பக் கட்டமான விடுதி வாழ்க்கைக்கு அப்பால் செல்லவில்லை. இப்போ அவர்கள் அந்த மேற்கு நாட்டின் சமூக அமைப்புக்குள் அனுமதிக்கப்பட்டு விட்டார்கள். அந்த அமைப்பின் எந்த மூலையில் அல்லது முடுக்கில் அவர்கள் தம் புதிய வாழ்வை ஆரம்பிக்கிறார்கள் என்பது முக்கியமாக சமூக கலாசாரக் கேள்வியாகும். புலம் பெயர்ந்த தமிழரின் சமூக மாற்றம் காலப்போக்கில் எப்படி அவர்களுக்கும் தாய்நாட்டுக்கும் இடையிலான உறவுகளைப் பாதிக்கின்றது என்பது நாம் ஆராய வேண்டிய விடயம்.

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரியின் நெடுங்கவிதை ஒரு முக்கியமான சமகாலப் பங்களிப்பு எனக் கருதுகிறேன். கவிஞனின் சுயசரிதைப் பாங்கு இந்தப் படைப்பின் உயிரோட்டத்தைப் பலப்படுத்துகின்றது. கவிதையில் பலமாக இழையோடும் சோகமும் ஆத்திரமும் இன்றைய ஈழத்தின் யதார்த்தத்தின் ஒருவகைப் பிரதிபலிப்புகள். புலம் பெயர்ந்த இளம் தமிழர் பலர் எழுதும் கவிதைகளில் ஒரு துன்பியல் தன்மை படர்ந்திருப்பதைக் கவனிக்கலாம். கௌரியின் நெடுங்கவிதை இதற்கு விதிவிலக்கல்ல. சொந்த அனுபவங்களின் துன்பங்கள் அங்கே தமிழ் மக்கள் படும் அவஸ்தைகள் இவையெல்லாம் ஏற்படுத்திய தாக்கங்களின் விளேவே 'அகதி'

ஆனுல் இந்த நெடுங்கவிதை விரக்தியின் மறு உருவமல்ல. வாழ்க்கையிடம் அழகிருக்கிறது, வாழ்க்கையை நேசிக்க வேண்டும், வாழ்க்கையையும் மனிதத்து வத்தையும் தவிர்த்த ஒரு விடுதலே இலட்சியம் இருக்க முடியாது என்ற தத்துவத்தைத் தழுவியது.

**பேராசியரியர்.சமுத்திரன்**

**ஒஸ்லோ,**
**நோர்வே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் நான்

"உன்னை அகதி என்று சொல்லிக் கொள்வது உனக்கு வேடிக்கையாக இல்லையா?" வாழ்வைத் தொலைத்து உயிரைக்காக்க மேற்கு நாடு ஒன்றின் விமான நிலையத்தில் அகதியாக வந்து இறங்கிய என் நண்பனிடம் அவனை விசாரணை செய்த குடிவரவு அதிகாரி ஒருவர் கேட்ட கேள்வி இது. வாழ்வின் கனவுகள், சிதிலமடைந்த மனித உறவுகள், தினமும் இரண்டு முட்சக்கரங்களுக்கிடையில் நசிபடும் மண்புழுவைப் போன்று வாழும் தாய் நாட்டின் மக்கள், இப்படி எண்ணற்ற சோகங்களுடனும் துயரங்களுடனும் மேற்கு நாடுகளுக்கு அகதிகளாக வந்திறங்கும் எம்மவர்கள் எதிர்நோக்கப் போகும் பாரிய பிரச்சனையின் அத்திவாரத்தில் எழுந்தது தான் மேலே அவ்வதிகாரி கேட்ட கேள்வி,

சரி, என் நாட்டின் மக்கள் இப்படி அகதிகளாகக் காரணம் என்ன? அரசபயங்கரவாதம், இயக்க அராஜகம். இது இரண்டுக்கும் காரணம் என்ன? காரணங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டு விட்டோம். இப்போது இவைகளுக்கெல்லாம் தீர்வுகள் என்ன? இப்படி எம்மிடையே ஏராளமான கேள்விகள் உண்டு தான். ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கெல்லாம் தீர்வு மக்களின் அழிவு மூலம் தான் வரும் என்று யாராவது கூறத் துணிந்தால் என்றல் நிச்சயமாக அதனை ஏற்றுக் கொள்ள இயலாது. எனவே தான் இன்று மக்களின் அழிவுக்கும், மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளுக்கும் காரணமான சகலவற்றின் மீதும் நான் ஆத்திரம் கொண்டவனாக இருக்கின்றேன். அந்த ஆத்திரங்களின் விளைவு தான் 'அகதி'.

அகதிகள் பலவகை. உயிர்ப்பாதுகாப்பு, மற்றும் பொருளாதார வசதிகள், போலி அந்தஸ்து இப்படி. எது எப்படியிருப்பினும் அவர்கள் தேடி வந்த இந்த மேற்கு நாடுகள் அவர்களின் கனவுகளை நனவாக்குகின்றதா? மேற்கு நாடுகளில் அகதிகளாக இருக்கும் பலரிடமிருந்தும் நான் தெரிந்து கொண்ட பதில் 'இல்லை' என்பது தான். எனவே எம் மக்களின் மேற்கு நாடுகள் பற்றிய கனவுகளுக்குத் தடை போட இங்கு அகதிகளின் கதையைச் சொல்லத் தொடங்கினேன். அகதிகள் ஆனதற்கான காரணங்களை சொல்ல வேண்டியதின் அவசியத்தில் இப்புத்தகத்தின் பெரும்பகுதி ஈழ அரசியல் யதார்த்தங்கள் பற்றிய பார்வையைப் பெற்றுக் கொண்டு விட்டது.

தேவைகள் அற்று, சேதிகளைச் சொல்லாது பிரசவிக்கும் எந்த இலக்கியமும் நிராகரிக்கப்பட்டு விடுவது நியதி. இதனை நன்குணர்ந்தவன் நான். இந்த 'அகதியும்' இன்றைய தேவைகளின் அடிப்படையில் படைக்கப்பட்டது தான். எனினும் அந்தத் தேவைகள் இந்த 'அகதி' மூலம் நிறைவேறி விட்டதா என்றால் அதற்கு விடை நிச்சயம் இல்லை என்பதாகவே இருக்கும். 'அகதி' என்கிற விடயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் ஆழமான ஒன்ருகும். இது பல பாரிய ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியது. இந்தத் தேவையை உணர்ந்து எமது சமூக விஞ்ஞானிகளும், இலக்கியவாதிகளும் செயற்பட வேண்டும். என்ருல் இயலுமானவரை அகதிகள் பற்றித் தெரிந்து சொல்லும் எண்ணமுண்டு. இவைகள் 'அகதியின்' அடுத்த தொடர்களாக இருக்கும்.

யார் எழுதிஞர்கள் என்று பார்த்தபின்னரே இலக்கியமா, அவசியமா? என்று ஆராய முற்படும் எம் "முற்போக்கு" இலக்கிய வாதிகளின் மத்தியில் 'அகதியின்' தேவை அறிந்து இது பிரசுரமாக என்னுடன் ஒத்துழைத்து பல வகையிலும் உதவி புரியும் என் நண்பர்களை நான் நினைவில் கொள்கிறேன்.

முன்னுரை வழங்கிய பேராசிரியர் சமுத்திரன், பின்னுரை தந்த விமர்சகர் இந்திரன் அட்டைப்படம் அழகுற வழங்கிய மூர்த்தி நான் 'அகதியை' எழுதிக் கொண்டிருந்தபோது அருகிருந்து வாசித்து விமர்சித்து பிரதிகள் எடுத்துதவிய சுசீலா ராஜரத்தினம் இவர்களோடு, எத்தனையோ நெருக்கடிகளையும் நேரமின்மையையும் பொருட்படுத்தாது 'அகதியை' முழுமையாக மின் கணனியில் வடிவமைப்புச் செய்து ஆலோசனைகள் வழங்கிய அன்பு நண்பர் 'தாயகம்' ஆசிரியர் ஜோர்ஜ் இ.குருஷேவ் ஆகியோருக்கு என்றென்றும் என் நன்றியும் அன்பும்.

பாரியங்கடை
[illegible]
கிழமை 1/1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி

நெடுங்கவிதை

கௌரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய கனவுகள்
இதயத்துள் நனைந்திட
இறங்கிய விமானப்
படிகளில் நடந்தேன்

அழகுத் தேவதை விமானநிலையம்
அழைக்கும் திசைதனில்
மெதுவாய் அசைந்தேன்.

Immigration
என்றொரு சுட்டல்
இதயத்தில் இப்போ
இடியென உறைந்தது
வரிசையும் கொஞ்சம்
வளர்ந்திட இணைந்தேன்

இனிப்பாய் பேசியே
எல்லாப்பயணிகள்
இதயத்துள் நுழைந்து
கைகளை இறுக்கிப்
பற்றிக்குலுக்கியும்
கண்களில் இயந்திரப்
புன்னகை வளர்த்தும்
வாழ்த்துக்கள் கூறி
வரவினைச் சொல்லும்
நல்ல officers
என் தலை கண்டதும்
இறுக்கினர் முகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தனின் நாட்டில்
*immigration* இல்
என் தலை கண்டதும்
இறுகிய முகம் ஒன்று
இப்போது எந்தன்
ஞாபகம் வந்தது.

சிங்கள மொழியினில்
கேள்விகள் கேட்டனர்
தெரியாது சிங்கள
மொழியென்று கூறிட
தெரிந்த சிங்களச்
சொற்களை தேடினேன்.

அப்போது அவர்கள்
என் இனம் தமிழ்என
அறிந்து கொண்டதால்
இறுக்கினர் முகத்தை

அந்த இறுக்கமே
என்னை என்தாயக
வேர்களிலிருந்து விரட்டியடித்தது.

அந்த இறுக்கமே
அங்கு என்மக்கள்
ஆயுதம்தனை ஏந்திட வைத்தது.

அந்த இறுக்கமே
இனத்தால், மொழியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுர் என்றெனை
எடுத்தெறிகின்றனர்
என்று நான் அன்று
எனக்குள் நொந்து
இன்னொரு இனமாய்
எனக்குள் உயிர்த்து
இங்கு நான் அகதியாய்
இறங்கிட வைத்தது.

இப்போது இங்கும்
இன்னொரு இறுக்கம்
இங்குநான் அகதியாய்
இறங்குதல் கண்டு
இவர்களின் மத்தியில்
எழுகின்ற இறுக்கம்.

"Are you srilankan?
show your passport"
அவர்களின் பார்வையின்
அடியினில் இருந்தொரு
அலட்சிய முள்ளொனை
அறைந்திட நிமிர்ந்தேன்.

பொய்யான நாட்டின்
Passport ஒன்றினுள்
பொறித்த என்தலைதனை
வெறுப்புடன் பார்த்தனர்.

"எத்தனை ஆயிரம் கொடுத்து நீ
எந்த Agency இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை வாங்கினாய்?
உண்மையைச் சொல்லும்
இல்லையேல் உன்னை
கைவிலங்கிட்டே
கடத்துவேன் நாட்டிற்கு
அங்கு நீ சென்றால்
அடியும் உதையும்
ஆ... ஊ... என்றால்
உன் உயிரும் போகலாம்
உண்மையைச் சொல்லு
அகதியாய்த்தானே
இங்கு நீ வந்தாய்.

எனக்கொரு நம்பிக்கை
இப்போது பிறந்தது.

எந்நாட்டின் நிலைமை
இவர்கட்கும் தெரியும்
என்பதால் எனக்கிவர்
உதவிகள் செய்யலாம்
தைரியமாகவே
அகதி நான் என்று
சொன்னேன் உண்மையை.

ஆ ஹ்ஹ்ஹா என்றே
நகைத்தனர் அவர்கள்
"அடிமையாய் அங்கு நீ
அழிவது உன் விதி
அழுக்கு மூட்டை நீ
அழகிய எங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்குள் வந்து
அமர்வது இயலுமோ?
காட்டுமிராண்டி நாட்டிலிருந்து
களவாய் வந்த நீ
திரும்பிப் போய்விடு!"
என்றென்னை ஏசிட
இறந்தேன் மறுபடி.

ஐயா!
கைகளைக் கூப்பி வணங்குதல் தவிர
வேறொன்றும் அறியா
அப்பாவி அகதிநான்
காசும் வேண்டாம்
காரும் வேண்டாம்
கட்டிட நல்ல கந்தையும் வேண்டாம்
நாடும் வேண்டாம்
நகரமும் வேண்டாம்
நான் எந்தன் உயிருடன்
நாறிட மட்டும்
இடமொன்று தாருங்கள்.

உயிரினை இழப்பதை
அறவே வெறுத்ததால்
ஓடோடி வந்த
அப்பாவி மனிதன் நான்

ஆடு, மாடு, தோட்டம்
ஏன் என் அம்மாவைக் கூட
அடமானம் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதியாய் வந்த
அப்பாவி மனிதன் நான்

உயிரினைக் காத்திட
உதவி செய்யுங்கள்
கால்களைக் கட்டி கதறிடும் எனக்கு
கருணை காட்டுங்கள்

கருணையாய் எந்தன்
கைகளை இப்போ
கைவிலங்கொன்று கட்டிப் பிணைத்தது
கண்களைக் கட்டி
காட்டுக்குள் வருத்துமென்
அண்ணன்மார் நினைவுடன்
அமர்ந்தேன் வண்டியுள்

எத்தனையாயிரம்
மைல்கள் செல்லினும்
என்நிலை இன்னும் மாறவேயில்லை
அடிகள் வாங்கவும்
அடிமைப்படவும்
கைவிலங்கோடு கைகட்டி நடக்கவும்
என்நிலை இன்னமும் மாறவேயில்லை

கைவிலங்கறுத்து
கைதிகள் தப்பும் கதைகளை அறிவேன்
என்விலங்கறுக்கும்
வழியொன்று மட்டும்
இப்போதும் தெரிந்திலேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைக்கவும் அறுக்கவும்
ஒன்றுமே செய்யவும்
இயலாத ஓர்
வலுவான விலங்கது
வடிவான விலங்கது.

இந்த உலகினில்
இருக்கின்ற பொருட்களில்
உற்பத்தித் தரத்தினில்
உயர்ந்த ஓர் பொருள்
புரிந்து நீ சொல்லென்றால்
உடனே சொல்வேன்
கைவிலங்கென்று.

உற்பத்தித் தரத்தினில்
உயர்ந்த ஓர் பொருள்
உழைக்கின்ற மனிதனை
உறிஞ்சும் அரசுகள்
உடைகின்ற வரைக்கும்
சிதறாத ஓர் பொருள்.

வாழ்க! வளர்க!
இந்த மானுடம் பெற்ற
உற்பத்தி நுட்பத்திறன்.

ஆயுதம் செய்வர்
அணுகுண்டும் செய்வர்
அடிக்கவும் உதைக்கவும்
அறிவினைக் கெடுக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் மட்டும் இயங்கிட
உயிரினைப் பறிக்கவும்
உத்திகள் செய்வர்

எல்லாமே இம்மென்றால்
ஈராயிரம், லட்சம்
என்றுமே செய்வர்

பொல்லாத வறுமைக்கு
மருந்தொன்று காணுங்கள்
என்று நாம் கேட்டால்
போதாது மானுட
விஞ்ஞானம் என்று
புழுகவும் செய்வர்

வாழ்க வளர்க
இந்த மானுடம் பெற்ற
மகத்தான விஞ்ஞானம்

பூட்டிய அறையொன்றுள்
புகுந்ததென்விடுதலை
எண்பத்தி நாலில்
இராணுவ வெறியர்கள்
இலங்கையில் என்னை
இப்படிச்சிறைகளில்
தள்ளிய நாட்களில்
தவித்திட்ட கணங்கள்.
இப்போது என்னை
இரக்கமாய் விழித்து
ஏளனம் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடு! நீ ஓடு!
ஆயிரம் மைல்கள்
ஆயிரம் கடல்கள் தாண்டி நீ ஓடு!
ஆகாயம், பூமி அத்தனை எல்லையும்
அகட்டி நீ ஓடு!
ஆயினும் மனிதனே
அடிமை விலங்குகள்
கைகளில் இருந்து
நீ!
போரிடுமட்டும் போகாது போகாது.
ஓடு! நீ ஓடு!
ஆயிரம் மைல்கள்.

எனது வாழ்க்கையை
எனக்கென கேட்டதால்
என்னைச் சிறைகளில்
இலங்கையில் அடைத்தனர்

என்னையும் கொஞ்சம்
பேசிட விடு என
எனது நண்பரை நானும் கேட்க
என்னை, காட்டின்
மரங்களில் கட்டினர்

இவைகளையெல்லாம்
எதிர்ப்பது தவிர்த்து
இங்கு நான் வந்தேன்
என்னுயிர் தன்னை காருங்கள் என்றேன்
என்கரம் தன்னை விலங்கொன்று பிணைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன குற்றம்
எங்கு நான் செய்தேன்?
விலங்கோடு விலங்காய்
செத்துப் பிழைக்க
என்ன குற்றம்
எங்கு நான் செய்தேன்?

வாழ்ந்திட எண்ணி
வாயைத் திறந்ததும்
வார்த்தைகள் கொஞ்சம்
பேசிட நினைத்ததும்
குற்றமாம் என்கிறார்
குரல்வளை நெரிக்கிறார்
கூக்குரலிடவும்
அனுமதி மறுக்கிறார்
என்ன குற்றம்
எங்கு நான் செய்தேன்
விலங்கோடு விலங்காய்
செத்துப் பிழைக்க.

•

எனது நண்பரே!
இலங்கை அரசே!
எனக்கொன்று இன்னமும்
புரியவே இல்லை
என்போல் வளர்ந்த
என்சில அயலவர்
இந்நிலை தவிர்த்து
இருக்கிறார் சுகமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குக்கு பதிலாய்
வேண்டிய சலுகைகள்
விரும்பிய போது
சுவாசிக்கும் உரிமைகள்
கைகளில் தங்களை
காத்திட ஆயுதம்
கார்களில் ஏ.சி
இப்படி அவர்கள்
இருக்கிறார் சுகமாய்
என்நிலை மட்டும் ஏன்இப்படியானது?
எனக்கது இன்னும்
புரியவே இல்லை

முட்டாள் கவிஞனே!
முட்டாள் கவிஞனே!
இப்போது எனினும்
என் சொல் கேளு
இப்படிக் கூறி இலங்கை அரசும்
இலங்கை அரசினை
எதிர்க்கும் என் நண்பரும்
என்னிடம் கூறினர்
இருவரும் ஒன்றையே

அவர்களின் விலங்கை
உடைத்து நான் எறிந்தது
அவர்கள் உழைப்பது
எனக்காக என்பதால்
அவர்களைப் பேச அனுமதித்திருப்பது
அவர்களின் உதடுகள்
எனக்காக குவிவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை வாழ அனுமதித்திருப்பது
அவர்கள் தம்முயிரை
எனக்காக அழிப்பதால்
இப்போது எனினும்
இதனை நீ புரிந்தால்
இருக்கலாம் சுகமாய்
என்றும் சொல்லினர்.

இவைகளை மறுத்ததால்.
இங்கு நான் வந்தேன்
புதிய அடிமையாய்
பரிணமம் கொண்டேன்

*   *   *   *

விடியற் காலையில்
வேன் ஒன்று வந்தது
மீண்டும் என் கைகளில்
விலங்கினை பூட்டினர்
வேறு ஓர் இடத்தினில்
விசாரணை • என்றனர்

கொலையும், கொள்ளையும்,
களவும் செய்யும்
குற்றவாளி போல்
கைவிலங்கேந்தவும்
கண்ணிலும், மயிரிலும்
காண்கின்ற நிறத்தினை
கணக்கினில் பதித்து
அடையாளம் காண்கின்ற
அசிங்கத்தை ஏற்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளைக் கட்டி
கமராவின் முன்னால்
சுவர்ப்பிணமாகவும்
விரல் நகஇடுக்கிடை
குண்டூசி பதிகின்ற
வேதனை பிறந்தது

விசாரணை என்ற பேரில் எந்தன்
வேதனை தன்னை விரும்பி ரசித்தவர்
உண்ணவும் உடுக்கவும்
உரிமையைத் தந்து
விடுதி ஒன்றினுள் வீசியெறிந்தனர்
மனம் வெதும்பிட வைத்தனர்.

என்னுடன் விடுதியில்
எத்தனையோ பேர்
பற்பல மொழியினர்
பற்பல நிறத்தினர்
பற்பல நாட்டினர்
பற்பல குணத்தினர்

பற்பல நாட்டின் பயங்கரவாத
வெப்பத்திலிருந்து தப்பித்து வந்தவர்
சுதந்திர நாட்டின்
போராட்ட நிழலில்
சுகங்காண எண்ணி
சுகமாய் வந்தவர்
விடுதலைப் போரின் இரத்தத்தை விற்று
வியாபாரம் செய்து
பணஞ்சேர்க்க வந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைக் கொன்று
கொள்ளையும் அடித்ததால்
மாவீரராகி மகிழ்வோடு வந்தவர்

வேலைவாய்ப்புகள்
வெற்றிடம் இன்மையால்
வேலை தேடிட விரும்பியே வந்தவர்

பயங்கரவாத நச்சுக் கரங்களால்
பால்வதைப் பட்டதால்
பயங்கொண்ட பெண்கள்

இப்படி அந்த விடுதியில் இன்னும்
எத்தனையோ பேர்
பற்பல எண்ணங்கள்
பயங்களோடு இருந்தனர்

வாழ்க்கை என்பது
வரிசையில் நிற்பதும்
வாகன இரைச்சலை
காதால் கேட்பதும்
T.V இன் முன்னே
கிடந்து சிதைவதும்
என்பதைத் தவிர்த்து
இப்போதெல்லாம்
இடைக்கிடை எமக்குள்
பேசவும் செய்தோம்
இலங்கையிலிருந்து வந்த அகதிகள்
எல்லோருமொன்றாய்
கூடவும் செய்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி அங்கே
அகதியாய் வண்ணக்
கனவுகளோடு வருகின்ற பேரினை
வரவேற்பதிலே
மகிழவும் செய்தோம்

அன்றும் அவ்வாறே
உணவினை அருந்திட
அமர்கிற வேளையில்
உறக்கம் மறந்த விழிச்சிவப்போடு
ஊமைக் கனவுடன் இரண்டு இலங்கையர்.

என்னைச் சோகம்
எரித்துத் தின்றது
உணவினை ஒருபுறம் ஒதுக்கியபடிக்கு
உடைந்த மனதுடன்
அறைக்குச் சென்றேன்

சிலமணி நேரம்
சென்றதன் பின்னர்
சிலரை எனது அறைக்குள் கொண்டு
வீசியெறிந்தனர்
விடுதியின் மேய்ப்பர்கள்

அந்தச் சிலரில்
இருவரில் ஒருவரும்
இருப்பது கண்டு
மகிழ்ந்ததென் நெஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பனே
உன் பேரென்ன?
உனக்கு அப்படி
என்னதான் நேர்ந்தது?
உந்தன் கண்களில்
பற்றிய சோகம்
எனது நெஞ்சினை
எரிப்பது எதனால்?

ஆதரவோடு அவனிடம் கேட்டேன்
ஆயினும் அவனோ
மௌனமாய் இருந்தான்

ஒவ்வொரு அகதியின்
கைமணிக்கட்டிலும்
நாய்களின் கழுத்தில்
லைசன்ஸ் கட்டும்
றபர்பட்டி போல
பெயர்ப்பட்டி இடுவது
விடுதியின் விதிமுறை

அதிலே அந்த
விடுதியின் பெயரும்
அவர்கள் எமக்கு
அழிக்கின்ற இலக்கமும்
அத்துடன் எமது
அன்னையும் தந்தையும்
அன்பினைக் குழைத்து
அழைத்திட்ட பெயரும்
அவசியம் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தெரிந்ததால்
அவனது இடது கையினில் அந்த
பட்டியைப் பார்த்து
படித்தேன் பெயரினை

இதனைத் தவிர
எதுவுமே அவனிடம்
இருந்து தெரிந்திட
வழியில்லை என்பதால்
விழிகளை மூடி வெளியினை மறந்தேன்
இரவினைச் சோகம்
எடுத்துச் சென்றது

மறுநாள் காலை
மகிழ்ச்சி பொங்கிட
என்னிடம் வந்தான்
கைகளைப் பற்றினான்
கட்டியும் அணைத்தான்
நீங்கள் தானா கௌரி என்பது
என்றும் கேட்டான்
உங்களைக் கவிதைகள் மூலம் நானும்
முன்னமே அறிவேன்
ஆயினும் இன்றுதான்
நேரிலே பார்க்கிறேன்
மகிழ்கிறேன் என்றான்.

எனது கவிதைகள்
பிடிக்குமோ உனக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின்
கருத்துக்களோடுதான்
உடன்பாடு எனக்கு
கவித்துவக் குறைவு உங்கள் கவிதையில்
கண்டேன் நிறையவே
ஆயினும் உங்களின்
கருத்துக்ளோடுதான் உடன்பாடெனக்கு

கவித்துவம் நிறைந்து
கவிதையெழுதிட
ஆயிரம் கவிஞர்கள்
எம்மிடை உள்ளனர்
ஆயினுமென்றும்
உண்மையொன்றையே
உருவமாய்த் தாங்கிய
உங்களின் கவிதைகள்
உயர்ந்தது என்றான்

ஈன்றபோதில் பெரிதுவக்கின்ற
இனிய மகிழ்ச்சி
எனக்குள் மலர்ந்தது

எப்படி நாட்டின் நிலைமைகள் இப்போ?
இந்திய ராணுவக் கொடுமைகள் எப்படி?
அண்மையில் நாட்டில்
இருந்து வந்த
அவனிடம் நாட்டின்
நிலைமைகள் அறியும்
ஆவலில் கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணும் என்ற இயல்புகளோடு
இயங்குகின்றது
இந்திய இராணுவம்
எந்த இராணுவம் எனினும் இதுவே
செய்யும் என்பது
தெரிந்தது தானே
எனவே எனக்கிதில்
அதிர்ச்சிகளில்லை

ஆனால்
மக்களியக்கம் என்ற பெயரில்
மனிதத்துவத்தை கடித்துக் குதறும்
இயக்கங்கள் செயலை
எப்படிச் சகிப்பது?
எந்த இராணுவம் செய்யும் கொடுமையும்
இவர்களின் கொடுமையில்
சிறியது தானே
எனக்கு நேர்ந்த கதியினை அறிந்தால்
இயக்கங்கள் கொண்டுள்ள
இரத்தக் கொலைவெறி
எத்தனை கொடியது
என்பது தெரியும்

ஆயினும் எந்தன் கதைதனை என்றும்
யாரிடமும் நீர் இயம்பிடாதீர்
எனது மனைவியும் இரண்டு குழந்தையும்
இன்னமும் இலங்கையில்
இருக்கின்ற வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதை சொல்வது
எத்தனை பயங்கரம்
என்பதை நீரும் அறிவீர் தானே
என்றபடிக்கு தன்கதை தொடங்கினான்

நானுமோர் இயக்கத்தின்
ஆதரவாளனே
நல்லது விடுதலை
என்று உணர்ந்ததால்
சிற்சில உதவிகள் செய்வது வழக்கம்

இதனை அறிந்த இன்னோரியக்கம்
என்னைக் கடுமையாய் எச்சரித்திட்டது
காரணம் கேட்டேன்
நாங்கள் மட்டுமே மக்களுக்காக
போரிடுகின்றோம்
என்றவர் கூறினர்
எதிர்த்துப் பேசிட வழியில்லை என்பதால்
எனது உதவிகளெதனையும்
எந்த இயக்கங்களுக்கும்
செய்வது தவிர்த்தேன்

இப்படி இருக்கையில்
இந்திய இராணுவம் இலங்கை வந்தது
இரக்கமற்ற கொலைவெறியாடும்
குத்தகை தன்னை
கைமாற்றிக் கொண்டது

போர் தொடங்கிற்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேளையில்
என்னையும் எனது நண்பர்கள் சிலரையும்
என்னை முன்னரெச்சரித்திட்ட
இயக்கம் வந்து
கடத்திச் சென்றது

என்னைக் கடத்திய
இயக்கத்தின் குழுவில்
இருந்த தலைவன்
எனது நண்பனே
என்னுடன் சிறிய வயதிலிருந்தே
பள்ளியில் படித்தவன்
இன்னமும் எனது
நண்பனுயிருப்பவன்
என்பதால் அவனிடம்
பேசிட முனைந்தேன்

எதற்காக எங்களை
கடத்தி வந்தீர்கள்
எந்தச்சிறிய குற்றமும் நாங்கள்
செய்திடவில்லையே

எனக்குக்கூட எதுவுமே தெரியா
தலைமை என்னை கடத்தச் சொன்னது
அத்துடன் எனது
கடமை முடிந்தது
என்றான் என்னிடம்

இரண்டு நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து சென்றதும்
என்னிடம் மீண்டும் பேசிட வந்தான்

உங்களில் எவரும்
எந்தத் தவறும்
செய்தவரில்லை என்பதை அறிவேன்
ஆயினும் உங்களில் ஒருவனைச் சுட்டு
சடலத்தை கொண்டுபோய்
Light post இல் கட்டி
எங்களியக்கத்தை
காட்டிக் கொடுத்ததாய்
காரணம் எழுதி
ஒட்டும் படிக்கு
order எனக்கு

எதற்காய் இப்படிச் செய்கிறீரென்றேன்
இது மக்களுக்கோர்
எச்சரிக்கைதான்
இப்படிச் செய்தால் மக்களெவரும்
எங்களியக்கத்தை
தவிர எதந்கும்
உதவிகள் செய்திட முனையார்களென்றான்

எங்களனைவரின்
இதயமும் ஒரு கணம்
இடிந்து போனது
இரத்தக் குழாய்களில்
இரும்பினைச் செலுத்திடும்
வேதனைவந்தது
எத்தனை இழிவாய் மண்டியிட்டழுதுட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி இயலுமோ
அப்படி அழுதோம்
ஆயினும் பலனோ பூச்சியமானது

எங்களிலொருவர்
இன்றைய இரவினில்
இரத்தப் பசிக்கு இரைபடப் போகிறோம்
என்பது கூட
நிச்சயமானது

அன்றைய மாலை
அழுது துடிக்கையில்
அவன் மீண்டும் வந்தான்

உங்களில் யாரை
கொல்வது என்று
எங்களுக்கின்னும் குழப்பமாயுள்ளது
ஏனெனில் நீங்களனைவரும்
எல்லா வகையிலும் பார்த்தால்
நல்லவராவீர்
என்பதாலெமக்குள்
இந்தக் குழப்பம்

எனவே நாங்கள்
இப்படியாக முடிவு செய்துள்ளோம்

அதிஷ்டக் குலுக்கல்
முறையிலுங்கள்
அனைவரின் பெயரையும்
எழுதிக் குலுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் தெரிவாவது
யாராயிருப்பினும்
அவனையே கொன்றிட
முடிவு செய்துள்ளோம்

இதனை நீங்கள் ஏற்பதா
இல்லையேல்
எல்லோருமொன்றுயிறப்பதா
என்று
இப்போதே உங்களின்
எண்ணத்தைச் சொல்லுங்கள்
என்று கூறி
இடத்தை விட்டகன்றுன்

அன்றைய இரவு
எங்களின் முன்றலில்
எழுதிய பெயர்களை
குலுக்கி போட்டனர்
இந்தக் கணத்தினில்
எங்களின் மனத்தினை
எத்தனை ஈட்டிகள்
கிழித்திருக்குமென
எண்ணியே பாருங்கள்

அவர்களின் தேர்வினில்
எங்களிலொருவனை
இரத்தப்பலியிட
இழுத்துச் சென்றனர்
இதன் பின்னரெங்களை
எச்சரித்திட்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் செய்த
இந்தக் கொலையும்
நாட்டினை விடுதலை செய்வதற்காகவே
என்றவர் எமக்கு
விளக்கமும் கூறினர்

விடுதலை என்பதும்
சுதந்திரம் என்பதும்
வேண்டியபோது உயிர்களைக் கொல்லுதல்
இல்லையேல் தாங்கள்
தற்கொலை செய்குதல்
என்பதைத் தவிர
எதுவுமே அறியா
இவர்களின் கைகளில்
இருக்கின்ற வரைக்கும்
இப்படிக் கொடுமைகள்
இருப்பது சகஜமே

இவைகளிலிருந்து
தப்பித்து வாழவே
இங்குநான் வந்தேன்
ஆயினும் இவற்றின்
தீர்வுகளென்பது
இதுவல்ல என்பதை
என்றும் நானறிவேன்

ஆயினுமெந்தன்
உயிரினை அன்று
காப்பது மட்டுமே
கவலையாய் இருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நான் வந்தபின்
எத்தனை இழிவுகள்

எனது நாட்டினில்
இருக்கின்ற வரைக்கும்
உயிர் வாழ்தல் என்பது
நிச்சயமற்றது
வாழ்க்கையோ அங்கு
மகிழ்ச்சியாய் இருந்தது
இங்கோ நிலைமை
தலைகீழாயுள்ளது

உயிர் வாழ மட்டுமே
இங்கு உத்தரவாதம்
ஆயினும் வாழ்க்கையோ
செத்துப்போனதாய்
இதனைவிடவும் எனது நாட்டில்
இறந்து போவதும்
எத்தனையோ மேல்
என்பது எனக்கும்
இன்றுதான் புரிந்தது
இப்போது அவனின்
கண்களிலிருந்து கசிந்தது கண்ணீர்

கண்களைத் துடைத்திடு
எனது நண்பனே
இதனைப் போலவே
எத்தனை துயரம்
எமது மக்கள்
தாங்கியே வாழ்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமெத்தனை
துயரங்கள் வரினும்
என்றுமவர்கள்
இருப்பார்களங்கே
எமது மண்ணிடை
இரத்தச் சாட்சியாய்
இருக்கின்ற எமது
மக்களை எண்ணின்
அவர்களின் தூசாய்
ஆவோம் நாங்கள்

அவர்படும் துயரின்
அளவினை இன்னும்
அறிந்திட இன்றும்
யார் தானுள்ளனர்
எனினும் கூட
இருக்கின்றார் அங்கே
இதனை எண்ணியே
எம் துயர் மறப்போம்
இன்னொரு நாளில்
அவர்களோடு இணைந்து
எமது வாழ்க்கையை
படைத்திட எழுவோம்
இப்போது உனது
கண்களை துடைத்திடு

* * * * *

அவ்வேளை விடுதி
பரபரப்பானது
கதவினைத் தட்டிய நண்பனொருவன்
கௌரி நீங்கள் என் செய்கிறீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.V யைக் கொஞ்சம்
திறவுங்கள் என்றான்

என்ன விசேடம்?
T.V யில் இன்று
Berlin சுவரினை
உடைக்கின்ற நிகழ்ச்சி ஒளிபரப்பாகுது
T.V யைத் திருப்பி
நிகழ்ச்சியைப் பார்க்கையில்
நெஞ்சமும் மானிட
நேயத்தால் குளிர்ந்தது
இதயத்துக் கெல்லைகள்
போட்டிட முயன்ற
இந்தச் சுவர்களை உடைக்கிற கரங்களை
இப்போதே பற்றிட
என்மனம் துடித்தது
வாழ்க அந்தக் கரங்களென்று
வாழ்த்துக்கள் தன்னை கூறவும் செய்தது

எனது விருப்பமும்
எல்லாச் சுவர்களும்
இடிந்து தூசாய் இறந்து போவதே

ஜெர்மன் அரசே!
ஜெர்மனி மக்களே!
இந்த மகிழ்ச்சியில்
இருக்கிறோம் நாங்களும்
எல்லைகளற்று
மனிதன் வாழ்வது
எத்தனை அற்புதம் என்பதை நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் நாட்களில்
இனிமையாய் உணர்வீர்

இந்த மகிழ்ச்சியில்
இருக்கின்ற நாட்களில்
எங்களின் வேண்டுகோள்
இருக்கின்றதொன்று

உங்களின் நாட்டுக்கு
அரசியல் அகதியாய்
உயிர்களைக் காத்திட
வந்திட்ட மக்களை
உங்கள் சிறுநகர்
எல்லைக்கப்பால்
உலவிடக்கூட தடைதனை விதித்ததால்
தாயும், மக்களும்
தனித்தனி நகர்களில்
தவித்திட நீங்களே
தடைச் சுவர் எழுப்பினீர்
இந்தச் சுவரினை
எப்போது உடைப்பீர்?

பாடசாலைக் கூரையைய் இழந்து
படித்த புத்தகம்
பறிபோன பின்பு
வீடுமற்று வெறுமையில் கருகி
வேதனையோடு உம் நாட்டுக்கு வந்து
மீதிக் கல்வியை
தொடர்ந்திட நினைக்கையில்
பாடசாலைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கட்கும்மிடையினில்
பாறையாகவே எழுப்பிய சுவர்களை
பாவமென்று நீ உடைப்பதென்று?

இனத்துவேசத்தால்
இலங்கை விட்டகன்று
அங்கவர் வந்து அமர்ந்திட்ட வேளையில்
நீறுபூத்த நெருப்பென அங்கே
நிறத்துவேசமாய் இருக்கிற சுவர்களை
இடித்துக் கடலினில்
எறிப்பது என்று?

இந்த வினாக்களே
எங்களின் வேண்டுகோள்
இனியதன் விடைகளோ
உங்களின் கைகளில்

என்றும் போலவே
இன்னொரு இரவு
இன்றும் வந்தது
எல்லா நண்பர்கள்
அறைக்கும் சென்று
இன்றைய நாளது
எப்படி இறந்தது?
என்பதை அறிந்திட
எண்ணியே நடந்தேன்

அறைக்கதவொன்றின்
அருகில் நான் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியை அங்கு ஓர்
அழுகுரல் கிழித்தது
என்னைத் தாங்கிடும்
இதயம் கனத்திட
இப்போதழுதவன் அருகிலமர்ந்தேன்

அகிலாண்டம் என்பது
அவனது பெயர்
அவனை நாங்கள்
அனைவரும் அன்பாய்
அகிலன் என்று தான்
அழைப்பது வழக்கம்
ஆதரவாக அவன் தலை தடவி
அவனது வேதனை
அறிந்திட முனைந்தேன்

இன்று எனது Lawyer வந்தார்
என்னை இந்த
நாட்டை விட்டு
கடத்துவதென்ற உத்தரவொன்றை
கையிலே தந்தார்

நாளை இந்த நாட்டைவிட்டு
கடத்தப்படவே காத்திருக்கின்றேன்
இலங்கையிலெனக்கு
என்னதான் நேருமோ
இறப்பு என்பது நிச்சயமென்றே
எண்ணுகின்றேன் நான்
என்றவன் அழுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனது சொற்களில்
இருக்கின்ற நியாயங்கள்
எனக்கும் புரிந்தது
ஏனெனில் இவனே
இலங்கை அரசின்
கொலைவெறியோடு
ஈழ விடுதலை
இயக்கங்கள் செயலையும்
விமர்சனம் செய்ததால்
விரட்டப்பட்டவன்
எனவே இவன்தன்
இன்னுயிர் காப்பது
இலங்கையிலிருந்தால்
இயலாத காரியம்
என்பது எனக்கும் நிச்சயமானது

விடுதியில் இருந்த
அனைவரும் சேர்ந்து
சிந்தனை செய்தோம்
இவனுக்கு இன்று
ஏற்படும் இக்கதி
இன்னொரு நாளில்
எமக்கும் வரலாம்
என்கின்ற எண்ணமும்
பயந்தரலானது
ஆகையால் அனைவரும்
ஒன்றாய்க் கூடி
அதிகாரிகளோடு
பேசிட எண்ணினோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் இன்னொரு
சிக்கலுமுள்ளது
அகதியாய் நாமிங்கு
அடைபட்டுக் கிடப்பதால்
அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளுதல்
அத்தனை சுலபமாய்
ஆகுமா என்று
எம்மிடை ஒருவன்
எழுப்பினன் கேள்வியை

இப்படி எழுந்த
சிக்கல்கள் பலதை
இலகுவாய் வென்றிட
இருந்தது ஓர் வழி
அமைதியாக அறையொன்றில் அமர்ந்து
அகதிகள் யாரையும் நாடு கடத்துதல்
ஆகாதென்று
கோரிக்கை வைத்து
உண்ணு விரதம் இருப்பது ஒன்றே
உண்மையை அவர்கள்
உணர்ந்திட ஓர் வழி
என்கின்ற முடிவும்
எழுந்தது சிலரிடம்

இப்படி நாங்கள்
இருந்தால் நிச்சயம்
எவரேனும் பெரிய அதிகாரி வருவார்
அப்போது அவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலைச் சொல்லலாம்
என்பதை எண்ணி
செயற்பட முனைந்தோம்

எத்தனை பேர்கள்
இப்படி இருந்திட
எண்ணியுள்ளீர்கள்?
இப்படி இருப்பதில்
இங்குள்ள எவருக்கும்
ஏதேனும் தடைகள் இருக்குதா என்பதை
இப்போதே கூறுவீர்
என்று வேண்டினான்
என்னொரு நண்பன்

இப்போது பலரின்
முகங்களிலெல்லாம்
இனம் புரியாத
மாற்றங்கள் வந்தது

மற்றைய மனிதனின்
மரணத்தைக் கண்டும்
மனதினைக் கல்லாய்
மாற்றிய மாற்றம்

பார்வையாளராய் இருப்பதும்
பலனை மட்டுமே
பெறுவதும் என்ற
பாரம்பரியத்தில் பழகிய மாற்றம்

எனக்கும் இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது விருப்பமே
ஆனாலும் தம்பி, என்றபடிக்கு
இப்போது ஒருவர் தன்
எண்ணத்தைக் கூறினார்.

என்னிடமிருந்த,
காணிபூமி எல்லாமே விற்று
இங்கு நான் வந்தேன்.
இங்கே நானும் இப்படி நடந்தால்
என் மேல் ஏதும் கோபம் கொண்டு
என்னையும் இவர்கள்
நாடு கடத்தினால்
எந்தனின் பணத்தினை யார் தான் தருவார்?
எனக்கு இருக்குது இரண்டு குமர்கள்
அவர்களைக் கட்டிட ஆர் தான் வருவார்?

எனவே என்னால்
இப்படி இருந்திட இயலாது எனினும்
நீங்கள் அனைவரும் நிச்சயம் இருங்கள்
நானும் இவைகளில்
நன்மைகள் விளைந்திட
நல்வாழ்த்துக்களைச் சொல்கிறேன் என்றார்.

எனக்குப் பணமோ
பிரச்சனை இல்லை
திரும்பிப் போவதில் தடைகளும் இல்லை.
ஆயினும் எனக்கோ
இங்கே இருக்கும்
அதிகாரிகள் நல்ல பழக்கம்
அவர்களின் மத்தியில் நற்பெயர் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பெயர்க்குண்டு

எனக்கு நல்லாய் English தெரியும்
என்பதால் இங்கே
இருக்கின்ற இலங்கையர்
ஏதேனும் சிற்சில விசாரணே என்ருல்
என்னேயே மொழிபெயர்ப்பாளராய்
அழைப்பர்
என்பதால் என்னே
எல்லோரும் அறிவர்
இப்படி நானும்
உங்களில் ஒருவனுய்
இருப்பது தெரிந்தால்
என் பெயர் கெடுமே
இதனுல் என்னுல்
எதுவுமே உதவிட
இயலாது என்ருன்
இன்னெரு இளேஞன்

முன்னர் ஒருதரம்
முகுந்தன் என்பவர்க்கும்
இப்படியாக ஓர் இன்னல் வந்தது
அப்போது இந்த
அகிலனே அழைத்தோம்
ஆனுல் அவனே
இதற்கெல்லாம் எனக்கு
இயலாது என்று இருந்தவன் தானே
இப்போது மட்டும் இவனுக்காக
எதற்காக நாங்கள்
இப்படி வருந்தனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றனர் சிலபேர்

தங்களின் பிரச்சனே
தீர்வதற்காக தனிய இருப்பதும்
தவறிப்போயின் மேலே சென்று
தாளம் போட்டுத் தப்பிட நினைப்பதும்
அதுவும் கூட இயலாது போனால்
எல்லோரும் தேவை போரிட என்பதும்
மத்திய தரத்து வர்க்கத்தின் குணங்கள்

இங்கே இருக்கும்
எல்லோரின் குணங்களும்
இப்படியே தான்
இருக்கிறதென்பேன்

அகிலனுக்கன்று பிரச்சனை இல்லை
ஆகவே அவனும்
தப்பித்துச் சென்றான்
இங்கே இருக்கும் ஏனையோருக்கு
இப்போ ஏதும்
பிரச்சனை இல்லை
என்பதால் எல்லோரும்
இயலாது என்கிறீர்
என்றாலும் எனக்கு
தெரிந்ததைச் சொல்கிறேன்
இங்கே இருக்கும் எல்லோருக்கும்
இப்படியான பிரச்சனை யாவும்
எப்போதும் பொதுவே
இலங்கைத் தீவின் இனப்போராட்டத்தை
இப்போது கொஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுதல் நல்லது.

இலங்கைத் தீவின் இனப்போராட்டமும்
உடனடியாகப் பாதிக்கப்பட்ட
ஒருவர்க்கத்தின் போராட்டமாகவே
உருக்கொண்டெழுந்தது
ஆனாலும் பின்னரோ
மக்கள் அனைவரின் பிரச்சனை தீர்த்திட
மகத்தான போராய்
வளரவும் முயன்றது
இப்படியாகப் பேச்சினை தொடங்கினார்
எங்களின் ஐயா

எங்களில் எல்லாம்
வயதில் மூத்தவர்
இலங்கை மண்ணில் வாத்தியாராய்
இருந்து வந்தவர்
காலம் எல்லாம் கண்டிப்பாக
கடமை செய்தவர்
கண்ணியமானவர்

பாடசாலை மாணவனொருவன்
பலகாலமாகத் தப்புகள் செய்ய
பண்பாய் அவனையும்
திருத்திட முனைந்தார்
திருட்டும் பொய்யும் தீயது என்றார்
ஆனால் அவனோ
அடிக்கடி தவறுகள் செய்தே வந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை இவரும் கண்டித்து விட
அவனோ இவர் மேல் கோபம் கொண்டு
இவரைக் கல்லால் அடித்து விட்டு
இயக்கம் ஒன்றுடன்
இணைந்து விட்டானாம்.
இதன் பின்னர் இவருக்கும்
எழுந்ததாம் தொல்லைகள்

இவைகள் முற்றி
இன்னொரு நாளில் அவனும் வந்து
இவரின் உயிர்தனை எடுப்பேன் என்றிட
இவரோ பயத்தினால்
இங்கே வந்தவர்
இவையெல்லாம் எனக்கு
இங்கே இருக்கும்
என் சக நண்பர்கள்
கூறிய விடயம்

அரசியல் அறிவு அதிகம் கொண்டவர்
என்பதில் அவரின்
சொற்களை வாங்கிட
எல்லோரும் எங்களின்
காதுகள் தந்தோம்

எழுபத்து ஒன்று ஏப்பிரல் மாதம்
இலங்கையில் ஜே.வி.பி
கிளர்ச்சி செய்தது
இதிலே இயங்கிய இளைஞர்கள் எல்லாம்
சிங்கள இளைஞரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கிளர்ச்சியை
அடக்கிய பிறகு
இலங்கை அரசு
கிளர்ச்சி பற்றிய
ஆய்வொன்று செய்தது

இதிலே இருந்தவர்
எல்லோரும் இளைஞர்கள்
படித்து விட்டுப் பல்கலைக்கழகம்
சென்றிட முடியா இளைஞர்
இல்லையேல்
பாடசாலையை முடித்தபின்னும்
வேலையற்றதால் விரக்தி கொண்டவர்

இவர்களின் பிரச்சனை தீர்வதற்காக
இலங்கை அரசிடம்
திட்டங்கள் இல்லை

எனவே
சிறிய இனங்களின்
வாழ்க்கையைப் பறித்து
பெரிய இனமதைத் திருப்தி செய்யும்
சியோனிச முறையில் செயற்பட்டதரசு

ஆண்டாண்டு காலமாய்
தேர்தலில் வெல்லவும்
அனைத்து மக்களின்
வாழ்க்கையைப் பறித்து
ஆட்சியாளர்தம்
ஆஸ்தியைப் பெருக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைத் தங்கும் முதலாளிகளின்
ஆவலைத் தீர்க்கவும்
சேவகம் செய்யவே
இலங்கையை விட்டு
பிரிட்டிஷார் போனபின்
இனவாதம் ஒன்றையே
கருவியாய் கொண்ட
இலங்கை அரசின்
கட்சிகட்கிதெல்லாம்
புதியது அல்லவே

இடைக்கிடை
இனக்கலவரம் மூலம்
இதுவரை இலங்கையின்
எல்லா மக்கள்தம்
சிந்தனைகளையே சிதைத்து வந்தவர்
இப்போதும் அதன்வழி
இயங்கிடத் துணிந்தனர்

எமது இனத்திற்கு
கல்வி இல்லை
எமது இனத்திற்கு
வேலை இல்லை
இவைகளையெல்லாம்
எடுத்துச் செல்பவர்

யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் என்று
எரிகிற நெருப்பில்
எண்ணெய் வார்த்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதத்துள்
இறங்கிய மக்களும்
இலங்கை அரசின்
கபடத்தை மறந்து
எம்மினம் தன்னில்
பகைமையைக் கொண்டனர்

இலங்கையரசும்
தரப்படுத்தலே
தமிழர்க்கெதிராய் தந்தது சுகமாய்

கல்வியும், அரச வேலைவாய்ப்பும்
மத்திய தரத்து
வர்க்கத்தின் தேவைகள்

ஏழைகள் கல்வியை
எட்டியும் பார்க்கார்
எட்டாத இடத்தினில்
இருக்கின்ற மேல் வர்க்கம்
எவ்விலை கொடுத்தும்
இவைகளைப் பெறுவார்
இடையினில் மாட்டிய
மத்திய வர்க்கமே
இப்போது இவைகளால்
ஏமாற்றம் அடைந்தது

இதுவரை காலமும்
எவ்வாட்சி வரினும்
அவர்களின் ஆதரவாளராய் இருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கீழே
இருந்தவரெல்லாம்
அடிமைகள் என்றும்
அடக்கியே வாழ்ந்தவர்
இப்போது மட்டும்
இலங்கை அரசின்
இனவாதம் கண்டு
கோபம் கொண்டனர்.

இவர்கள்தம் பிரச்சனை
இனங்களின் பிரச்சனை
என்றபடிக்குக் கோஷமும் வைத்தனர்
தமிழ் ஈழம் தான் தீர்வு என்று
தேர்தலில் நின்று
வெற்றியும் கண்டது
இவர்களுக்கு அன்று இருந்த தலைமை

பாராளுமன்றக் கதிரையிலமர்ந்து
பாலும் தேனும்
அருந்திய அவர்கள்
கோஷங்கள் தன்னை
குப்பையில் போட்டனர்

இதன் பின்னர் இயக்கங்கள்
வளர்ந்தன வேகமாய்.
இலங்கை முழுவதும்
இருக்கின்ற மக்கள்
எல்லோருக்குமே
இருக்குது பிரச்சனை
அடிப்படை மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனை என்பது
பொருளாதாரமே
இவைகளை எண்ணிச்
செயற்பட முனைந்தனர்

மக்கள் அனைவரின்
தேவைகள் அனைத்தையும்
தீர்ப்பதற்காகவே
தியாகங்கள் தொடர்ந்தன
தமிழர்கட்காகச்
சிங்கள மக்களும்
சிங்களவர்க்காகத்
தமிழ் மக்களும்
ஆதரவாகக் கோஷம் போடும்
அளவுக்கு எமது
போராட்டம் வளர்ந்தது

இதன்பின்னர் இந்தியா
இதற்குள்ளே நுழைந்ததும்
இயக்கங்கள் அனைத்தையும்
திசைமாறச் செய்ததும்
தெளிவான விடயம்
இதைவிட்டு எமது
இலக்குக்கு வருவோம்

இலங்கைத் தமிழரின்
இனப்போராட்டமும்
உடனடியாகத் தோன்றியபொழுது
ஒரு வர்க்கத்தின்
போராட்டமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்கொண்டெழுந்தது
ஆயினும் அதன்பின்
அனைத்து மக்களும்
அடிமைகளாக அழுந்துதல் கண்டு
எழுந்தனர் போரிட

இப்போதுமிங்கே
இருப்பது இது தான்
வேறு வேறு வடிவங்களெனினும்
விளைவுகள் ஒன்றே

எங்களில் ஒருவர்க்கு
பிரச்சனை என்றால்
ஏனோ தானோ என்றிருக்காமல்
எமக்கு அப்படிப் பிரச்சனை உள்ளதை
எண்ணியே செயற்படல்
எப்போதும் நல்லதே

ஆயினும் ஐயாவை
அலட்சியம் செய்தே
அனைவரும் கலைந்தனர்

*      *      *      *

துக்கமும் தூக்கமும்
துரத்தியதென்னை
அன்றைய இரவின்
கனவினில் எந்தன்
அம்மா வந்தார்
என்னை ஈன்ற தாயோ இவர்கள்
இல்லையெனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரையுமெந்தன்
அம்மா என்றே
இயம்புவேன் நானும்

அன்று நான் இலங்கையில்
அரசுக்குப் பயந்து
ஆதரவின்றி அலைந்த தினங்களில்
அணைத்த உறவிது

எப்படி மகனே
இருக்கின்றாய் நீயும்?
இப்போதும் அவர்கள்
உன்னுயிர் பறித்திடும்
ஊக்கம் கொண்டே
அலைகின்றார் அங்கே
எனவே மகனே
இன்னமும் சில நாள்
இங்கே நீ இருப்பது
எதற்கும் நல்லது

அத்துடன் மகனே
இன்னுமோர் செய்தி
சோகமாய் உன்னிடம்
சொல்லவே வந்தேன்

எந்தனின் இளையவன்
உந்தனின் தம்பி
உன்னுடன் பாசமாய்
உணர்வோடு கலந்தவன்
இன்னமும் ஈரேழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதிலும் குறைந்தவன்
இப்போது அவனொரு
போராளி என்கிறார்

பள்ளிக்குச் சென்றவன்
பாடங்கள் படிக்கையில்
பாதியில் அவனை
படைக்கெனப் பறித்திட்டார்
இந்திய இராணுவ
துணையுடன் வந்து
கட்டாய ராணுவ
பயிற்சியாம் என்று
கடத்தியே சென்றார்
இப்போது அவனது
இறக்கையில் ஆயுதம்

ஏன் என்று புரியாமல்
ஏந்தியே அலைகிறான்

இப்படி இன்னமும்
எத்தனை பாலகர்
பொத்திய விரல்களுள்
புழுங்கியே மடிகிறார்

மொத்தமாய்ச் சொல்கிறேன்
இப்போது நாட்டினில்
என் பிள்ளை போலவே
இருக்கின்ற பிள்ளைகள்
எல்லோரின் கையிலும்
இருக்கின்றது ஆயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காகச் சுடுகின்றோம்
எவரை நாம் கொல்கின்றோம்
என்பது பற்றிய
எண்ணங்கள் அற்றவர்

தாயோ தந்தையோ
சகோதரர் ஆயினும்
தலைவர்கள் சொல்வதை
தட்டாமல் செய்பவர்
இப்போது இவர்களின்
கைகளில் தானே
எங்களின் தலைவிதி

அம்மா,
பாலகர் கைகளில்
ஆயுதம் தந்திட
இயக்கங்கள் கொண்டுள்ள
தேவை தான் என்ன?

கேள்விகள் மறந்து
கொலைகளைச் செய்யும்
இயந்திர மனிதனே
இயக்கங்கள் தேவை

மூளையும் இதயமும்
முக்கியமற்றது
துப்பாக்கிச் சனியனை
தூக்கிடக் கையும்
துடிக்கத் துடிக்க
உயிரினைக் குடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டினைச் செலுத்திடும்
திறமையும் மட்டுமே
தேவையாம் அவர்க்கு

அம்மா,
மக்களின் யுத்தத்தில்
சிறுவர்கள் பங்கு
மகத்தானதென்று
வரலாறு சொல்லுதே

வீரவியட்னும்
வரலாற்றைப் படித்தால்
தொட்டிலில் கிடந்த
குழந்தையும்
நோயுடன்
கட்டிலில் படுத்த
வயோதிபர் தவிர
மக்கள் அனைவரும்
போரிட்டே வென்றதாய்
வரலாறு ஒன்றெனை
வணங்கிடச் சொல்லுதே.

ஆமாம் மகனே,
மக்கள் யுத்தம்
அங்கே நடந்தால்
மகத்தானதாகவே
இருப்பார் இச்சிறுவரும்
ஆனாலும் அங்கே
நடப்பது என்ன
அறியாயோ நீயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை விட்டு
மண்ணையும் விட்டு
வாழ்க்கையைத் தின்று
மலிகின்ற மரணம்

மானிட விழுமியம்
பின்னோக்கிச் செல்லும்
மந்தைகள் போலவே
வாழ்கின்றோம் நாங்கள்

ஏன், எதற்கு, எப்படி என்று
கேள்விகள் தன்னை
கேளுங்கள் என்று
பலநூறு வருடங்கள்
முன்னரே அன்று
கிரேக்க நாட்டின்
தெருக்களில் நின்று
கோரிக்கை தன்னைக் கூறினார் என்று
சோக்கிரட்டீஸ் என்றொரு மனிதனை
சுற்றிய சுவர்களுள்
சுதந்திரம் பறித்து
விஷத்தையும் கொடுத்து
அவருயிர் பறித்த
மிருகத் தனங்கள் எங்கள் நாட்டில்
மிஞ்சியுள்ளது
இன்னமும் அங்கு.

தினம் தினம் நூறு
சோக்கிரட்டீஸ்கள்
சிந்தனைத்தீயை எழுப்பினார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருக்களில் நாய்போல்
செத்துக் கிடக்கிறார்

கேள்விகள் எதுவும்
கேட்பதை மறந்தோம்
கைகளில் ஆயுதம்
கொண்டு வருபவர்
யாராய் இருப்பினும்
அவர்கள் எம்மிடம்
கேட்பதை எல்லாம்
கொட்டியே கொடுக்கிறோம்

இருக்கின்ற எஜமானர்
போதாது என்று
இன்னொரு புதிய
எஜமானனாக
எங்களின் நாட்டில்
இந்திய அரசு
மேலாதிக்கம் செலுத்திட வந்தது

தென்னாசியாவின்
நாடுகளெல்லாம்
தான் தின்ற எச்சிலை
துப்பிடும் தொட்டில்கள்
என்கின்ற எண்ணத்தில்
இன்னமும் இருக்கின்ற
இந்திய அரசு
எங்கள் சுதந்திர
இருப்பைப் பறித்திட
எங்கள் தெருக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமித்தது

அமைதிப்படை
என்கின்ற பெயரில்
அழிவு வேலைகள்
அனைத்தையும் செய்தது

வாசலை மூடியே
மௌனித்துக் கிடந்தோம்
வாழ்வும், எம் வளங்களும்
எரிந்தது சாம்பலாய்

அம்மா,
மரணங்களற்று
அழிவுகளற்று
மாற்றங்கள் வருமா?
போராட்டம் என்றால்
இதுவெல்லாம் சகஜம்
என்று சொல்வதைக்
கேட்டதேயில்லையா?

மகனே,
வாழ்க்கையைத் தேடி நாம்
போரிட்டோம் என்றால்
மரணமும் அழிவும்
வருமென்ற போதும்
மகிழ்ச்சி அடையலாம்
மாற்றங்கள் வருமென.
நாமோ இங்கு
நடத்தும் இப்போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தை மட்டுமே
வழங்கிடும் என்றால்
மயானமாய் நாடு
ஆவது மட்டுமே
மாற்றமாய் வந்திடும்
இது தானா எங்களின்
இன்றைய தேவை?

வாழ்க்கையை முதலில்
நேசிக்க வேண்டும்
வாழ்க்கையைத் தேடியே
போரிட வேண்டும்
போர்களின் முடிவு
அமைதி என்கின்ற
புனிதங்கள் தன்னை
காக்கவும் வேண்டும்

ஆனால் எம் நாட்டினில்
நடப்பது என்ன?
மரணமும் அழிவுமே
மாற்றங்கள் தருமென்ற
மயக்கத்தில் அங்கு நாம்
வாழ்க்கையை இழக்கிறோம்

அரசியல் என்பதை
அறியாத ஆயுதங்கள்
அகதிகளாக

துரத்துது மக்களை
ஏகாதிபத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுபிடி களாகவும்
எங்களின் இயக்கங்கள்
இருக்கின்ற கொடுமைகள்

இன்னமும் இப்படி
எத்தனை நாட்கள்
இருப்பது மக்கள்
என்றபடிக்கு
மௌனமாய் அழுதார்
எந்தனின் அம்மா

அன்னையின் அழுகையென்
தேசத்தின் அவலமாய்
அடிவயிற்றினில்
அமிலத்தைக் கரைத்தது
திடுக்கிட்டே நானும்
திறந்தேன் விழிகளை

கனவினில் கூட
இனிமையை இழந்து
கரையும் என் வாழ்வின்
இன்னொரு கணமாய்
இன்றைய விடியல்
இல்லாதிருந்தது

காலைக்கதிரவன்
கைகளில் வரவும்
வாழ்க்கையோ வேறு ஓர்
வடிவமாய் மலர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னுரை

ஈழத்தின் நவீன தமிழ்க் கவிதை இன்றடைந்துள்ள புதிய பரிமாணங்கள் அதன் இன்றைய அரசியல் வரலாற்றின் பின்னணியில் இருந்து பெறப்பட்டவை. அத்தீவில் வாழும் மக்களின் உயிர் மீதும் மனச்சாட்சி மீதும் கை வைத்து உலுக்கும் அரசியல் நிகழ்வுகள் அக்கவிஞர்கள் உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லையும் மனித சுதந்திரம் குறித்த ஆவணங்களாக்கி விட்டன.

1940களில் முளைவிட்டு வளரத் தொடங்கிய ஈழத்து நவீன தமிழ்க் கவிதை அம்மண்ணின் மக்களை இயந்திரத் துப்பாக்கிகளும் போர்விமானங்களும் பலி கொள்ளத் தொடங்கிய போது தனது அலங்கார உத்திகள் அனைத்தையும் கீழே போட்டு விட்டு திட்டவட்டமான சொற்களினால் ஆன நேரடியான மொழியைக் கையாளத் தொடங்கி விட்டது. அது தவிர அழகை மட்டுமே சாதிக்க ஆசைப்பட்டுக் கொண்ட கவிதையின் பண்டிதத்தனம் முகம் குலைந்து அழகை இரண்டாம் பட்சமாக்கி வாழ்க்கையைப் பேசத் தொடங்கிய உடனேயே பெரிதும் சமூகச் சார்புடையதாகவும் மாறிப் போனது. ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிரதான பண்பே அதன் சமூகச் சார்பு தான் என்று குறிப்பிடுவார் ஈழத்துத் திறனாய்வாளர் எம்.ஏ.நுஃமான். 'மௌனத்தின் குடியரசு' (Republic of Si-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

lence) எனும் கட்டுரையில் பிரெஞ்சுத் தத்துவவாதி ழான் பால் சாத்தார் (Jean Paul Satre) ஜெர்மன் ஒடுக்குமுறையை எதிர்த்துரைத்த காலங்களில் எழுதிய வரிகள் இன்றைய ஈழத்துக்கும் பெரிதும் பொருந்தும்.

"நாடு கடத்துதல், கைது, குறிப்பாக மரணம், (மகிழ்ச்சி நிறைந்த நாட்களில் இவற்றை எதிர்கொள்வதில் இருந்து நாம் சுருங்கிக் கொள்வோம்) என்பவை நமது அக்கறைக்குரிய வழக்கமான பொருட்களாகி விட்டன. ஒவ்வொரு கணமும் மிகச் சாதாரணமான எல்லோருக்கும் தெரிந்த உண்மையான "மனிதன் நிலையற்றவன்" என்பதை நமது வாழ்க்கையில் முழுமையாக உணர்ந்தோம். நம்மில் ஒவ்வொருவரும் அவரது வாழ்க்கையில் இருந்து மேற்கொண்ட தேர்வு அசலான தேர்வாகும். ஏனெனில் அது மரணத்தின் முகத்துக்கு நேருக்கு நேர் எடுக்கப்பட்டதொன்றகும்"

இப்படித் தான் ஈழத்து நவீன தமிழ்க்கவிதை, மொழி, தொனி, வடிவம், ஓசை, கரு ஆகியவற்றை மரணத்தின் முகத்துக்கு நேருக்கு நேர் தேர்ந்தெடுக்கிறது.

1988 இல் வெளிவந்த 'சோகங்களிலும் துயரமானது' என்ற கவிதைத் தொகுதி மூலமாக இந்திய இலங்கை முற்போக்கு அரசியல் இலக்கிய வாதிகள், பலரது கவனத்தை கவர்ந்த கௌரி அகதி என்னும் இந்த நீள்கவிதையின் மூலமாக தமிழில் தனக்கென ஒரு இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் இதுவரை யாருமே பதிவு செய்திராத அனுபவத்தை 'அகதி' எனும் நிலையை ஒரு சுயசித்திரமாக இக்கவிதையில் அமைத்திருக்கிறார். அடியாளத்தில் அமைந்த ஒரே சீரான அகவல் ஓசையுடன் நகரும் கவிதை ஏராளமான விமர்சனங்களை, சிங்கள அரசு பற்றிய அரசை எதிர்க்கும் போராளிக் குழுக்கள் பற்றிய, உலகினைப் பல நாடுகளாகப் பிரித்து எல்லைச் சுவர் எழுப்பியது பற்றிய, ஒன்றிணைந்து இயங்க வேண்டிய நேரத்தில் அகதிகளின் தனியான, சுயநலமான சந்தர்ப்பவாதப் போக்குகள் பற்றிய விமர்சனங்களை முன் வைக்கிறது.

தாயக மண்ணின் வேர்களை அறுத்துக் கொண்டு வேறு நாடுகளில் அகதியாக அடைக்கலம் தேடும் ஒரு மனிதனின் வேதனை கவிந்த ஒரு வாக்குமூலம் தான் இக்கவிதை. இங்கு எழுத்தைக் கவிதையாக்கி விட வேண்டுமென்பதற்கான தனியான முயற்சிகள் ஏதும் காணமுடியாது. மற்றவர்களின் அளவுகோலின்படி இது கவிதை தான் என்பதற்கான முகாந்திரங்கள் கூட இல்லை.

தாயக மண்ணின் அரசியல் நிகழ்வுகளினால் உயிரினை இழப்பதை அறவே வெறுத்த அப்பாவி மனிதன் ஒருவன் தன் உயிரினைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு பிறநாடுகளில் அகதியாக தஞ்சம் அடைகிறபோது அவன் படும் வேதனைகளை விமர்சனங்களுடன் விபரிக்கிறது கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எந்தன் உயிருடன்
நாறிட மட்டும்
இடம் ஒன்று தாருங்கள்

எனக் கேட்கும் அகதிகளுக்கு அவர்கள் கூறும் பதில் இது தான்.

அடிமையாய் அங்கு நீ
அழிவது உன் விதி
அழுக்கு மூட்டை நீ
அழகிய எங்களின்
நாட்டுக்குள் வந்து
அமர்வது இய லுமா
காட்டுமிராண்டி
நாட்டிலிருந்து
களவாய் வந்த நீ
திரும்பிப் போய் விடு

என்று அவர்கள் ஏசுகிறார்கள். கையில் விலங்கினை இடுகிறார்கள். விலங்கறுத்து தப்பித்து ஓடலாம் என்று நினைக்கையில் அந்த விலங்கு ஒரு தரத்தினில் மிக உயர்ந்த மிகவும் பலமான ஒன்று என்று தெரியவருகிறது. கவிஞன் ஒரு விரக்தியான விமர்சனத்தை அங்கதத் தொனியுடன் முன்வைக்கிறான்.

இந்த உலகினில்
இருக்கின்ற பொருட்களில்
உற்பத்தித் தரத்தினில்
உயர்ந்த ஓர் பொருள்
புரிந்து நீ சொல்லென்றால்
உடனே சொல்லுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிலங்கென்று

................

வாழ்க வளர்க

இந்த மானுடம் பெற்ற

உற்பத்தி நுட்திறன்

என்று விலங்கைப் பற்றிப் பேசுகிறுர் கௌரி. பிரெஞ்சு ஓவியர் மார்ஷல் டுஷம்ப் (Marshal Duchamp) உலகின் முட்டாள்தனமான, குற்றமிக்க செயல்களையும் தனது செயல்களையும் கூட கண்டு சிரிக்கும் வகையில் தன் படைப்புகளை உருவாக்கியது போல, கௌரி தனது விமர்சனங்களை வைக்கிறுர். இடையில் நாம் இழந்து விட்ட சங்ககாலத்துத் தமிழ்ப்புலவர்கள் கொண்ட அரசர்கள் தவறு செய்யும் போது இடித்துரைக்கும் நேர்மையை கௌரி மீண்டும் புதுப்பிக்கிறுர்.

இந்த இருபதாம் நூற்றுண்டு ஜனநாயகத்துக்கு உகந்ததான இல்லை. அரசியல் சற்றும் யாருக்கும் சொந்தமில்லாத இடத்தில் சென்று அமர்ந்து கொண்டுள்ளது. உள்ளீடற்ற நீர்க்குமிழி போலிருக்கும் ஒரு அபாயகரமான காலகட்டத்தில் நாம் வாழ்கிறேம். இந்தக் கால கட்டத்தில் அறிவுஜீவிகளுக்கு ஒரு கடமை முன்னெழுந்து நிற்கிறது. அரசியல்வாதிகள் தங்களுக்கென்று இலட்சியங்களைக் கொண்டிருக்கலாம். பெரும்பாலான மோசடி அரசியல்வாதிகளைப் போலன்றி மிக உண்மையான, நேர்மையான இலட்சியப்பிடிப்புள்ள அரசியல்வாதிகளுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஆபத்து நிறைய உள்ளது. அவர்கள் தங்கள் இலட்சியத்தின் மீதுள்ள அளவற்ற பாசத்தின் காரணமாக அந்த இலட்சியங்கள் செயற்படுத்தப்படும் போது ஏற்பட்டு விடக் கூடிய அந்த இலட்சியத்துக்கே கூட எதிர்ப்பான தீய விளைவுகள் குறித்த அபாயத்தை சில நேரங்களில் கவனிக்கத் தவறி விடலாம். இந்த நேரத்தில் எவ்வித அச்சமும் இன்றி இயல்பான பகுத்தறிவைப் பயன்படுத்துமாறு அரசியல்வாதிகளைத் தூண்ட வேண்டியது அறிவுஜீவிகளின் கடமை. மனிதனின் சாரமாக இருக்கிற சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் எதன்பேராலும் அரசியல்வாதிகளும் சரி, அரசுகளும் சரி, அழித்து விடாமல் அவர்களை விழிப்படையச் செய்ய வேண்டியது கவிஞனின் கடமை. இந்த நீள்கவிதை இந்தக் கடமையை மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறது.

'சோகங்களிலும் துயரமானது' எனும் தனது கவிதை நூலில் கண்ட கனவு மயக்கம் கொண்ட இளைஞனை கௌரியை மிகவும் முதிர்ந்த நிலையில் நான் "அகதி"யில் காண்கிறேன்.

நான் சிலாகித்துப் பேசக்கூடிய கவிதைக் கலையின் தொழிற்தேர்ச்சியின் உன்னதங்களை கௌரி ஏதும் தொட்டுவிடவில்லைத் தான். ஆனால் அவர் மனச்சாட்சிக்கு வேதனை தராத வகையில் உண்மைகளைத் தொட்டிருக்கிறார். தனது கவிதைக்கலை பற்றியே கூட தனது நண்பனின் வார்த்தைகளாக இடையில் செருகியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவித்துவம் நிறைந்து
கவிதை எழுதிட
ஆயிரம் கவிஞர்கள்
எம்மிடை உள்ளனர்
ஆயினும் என்றும்
உண்மை ஒன்றையே
உருவமாய் தாங்கிய
உங்களின் கவிதைகள்
உயர்ந்தது என்றான்

இந்தக் கவிதையில் முடிந்த முடிவாக ஏதும் சொல்லப்படவில்லை. தமிழன் ஒரு அகதியாக இருப்பதின் அவலத்தைப் பேசியது தவிர தீர்வுகள் எதையும், தீர்ப்புகள் எதையும் தரவில்லை, கௌரி.

கனவினில் கூட
இனிமையை இழந்து
கரையும் என் வாழ்வின்
இன்னொரு கணமாய்
இன்றைய விடியல்
இல்லாதிருந்தது
காலைக்கதிரவன் கைகளில் வரவும்
வாழ்க்கையோ வேறோர்
வடிவமாய் திகழ்ந்தது.

என்ற ஒரு திறந்த முடிவை முன்வைக்கிறார் கௌரி. இதுவே இந்நூலின் மிகப் பெரிய சிறப்பு என நான் கருதுகிறேன்.

இந்த நூற்றாண்டின் அரசியல் வல்லுனர்களுக்குத் தெரிந்திருக்கக் கூடிய மிகப் பெரிய உண்மை இது தான். எதுவும் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை உயரிய இலட்சியமாக இருந்தாலும் அது முடிந்த முடிவு அல்ல. அதை மனித குலத்தை மென்மேலும் உயர்த்திப் பிடித்துச் செல்லவேண்டியதாக மாற்றியாக வேண்டும்.

ஆக்டேோவிய பாஸ் என்னும் மெக்சிக்கோ நாட்டின் உன்னதமான எழுத்தாளனனின் வார்த்தைகள் இங்கு மிகவும் கருதத் தக்கவை.

"முடிந்த முடிவுகள் எதனையும் நாங்கள் கொண்டிருக்கவில்லை என்பதையும் எல்லா உண்மைகளும் குறிப்பாக அரசியல் உண்மைகள் மாறும் தன்மை கொண்டவை என்பதையும் மக்கள் புரிந்து கொள்கிற போது மற்றவர்களை நோக்கிய, தங்களை நோக்கிய வஞ்சப் புகழ்ச்சிக்கும், இரக்கத்துக்கும் இடங் கிடைக்கும். இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய தேவை இது தான் இரக்கத்தின் மறுஉயிர்ப்பு"

**விமர்சகர் இந்திரன்**

**சென்னை 24,**
**தமிழ்நாடு,**
**தென்னிந்தியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னுரையிலிருந்து

1988 இல் வெளிவந்த 'சோகங்களிலும் துயரமானது' என்ற கவிதைத் தொகுதி மூலமாக இந்திய, இலங்கை முற்போக்கு அரசியல், இலக்கிய வாதிகள், பலரது கவனத்தை கவர்ந்த 'கௌரி' 'அகதி' என்னும் இந்த நீள்கவிதையின் மூலமாக தமிழில் தனக்கென ஒரு இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார்.

தமிழில் இதுவரை யாருமே பதிவு செய்திராத அனுபவத்தை 'அகதி' எனும் நிலையை ஒரு சுயசித்திரமாக இக்கவிதையில் அமைத்திருக்கிறார். அடியாளத்தில் அமைந்த ஒரே சீரான அகவல் ஓசையுடன் நகரும் கவிதை ஏராளமான விமர்சனங்களை, சிங்கள அரசு பற்றிய அரசை எதிர்க்கும் போராளிக் குழுக்கள் பற்றிய, உலகினைப் பல நாடுகளாகப் பிரித்து எல்லைச் சுவர் எழுப்பியது பற்றிய, ஒன்றிணைந்து இயங்க வேண்டிய நேரத்தில் அகதிகளின் தனியான, சுயநலமான சந்தர்ப்பவாதப் போக்குகள் பற்றிய விமர்சனங்களை முன் வைக்கிறது.

**விமர்சகர் இந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org